# The Morning Star

*A Christian Publication*

# உதயதாரகை

*Established 1841*

*Subscription Rs.100/= (postage Separate)*

*The Morning Star*
*CACM Head Office*
*Christian Theological Seminary*
*Maruthanarmadam*
*Chunnakam*
*Sri Lanka.*

***Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.***

***Email: themorningstar1841@gmail.com - Vol. 182 - Jaffna - Friday, 23rd November 2023 - No. 01 - Web: www.cacmchurch.com***


## திருச்சபைத் தலைவரின் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தி

அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய திருச்சபையின் மக்களே! உடன் ஊழியக்காரர்களே! உங்கள் அனைவரையும் இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழ் பத்திரிகையான உதயதாரகையின் வழியாகச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள்ளுகின்றேன். இவ்வருடமும் கிறிஸ்துவின் பிறப்பினைக் காணக் கடவுள் சித்தம் கொண்டதற்காவும் நம் அனைவரையும் ஜீவன் சுகம் பெலனோடு வைத்திருக்கின்ற கிருபைக்காகவும் ஆண்டவருக்கு நன்றிகூறி அர்த்தமுள்ளதாகக் கிறிஸ்துவின் பிறப்பைக் கான அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வருடத்திலே இரண்டு, நீண்ட காலம் தொடர்ந்த யுத்தங்களின் செய்திகளையும், அம் மக்களின் அவலங்களையும், அப்பாவிப் குழந்தை களும் பெண்களும் ஈன இரக்கமின்றிக் கொடூரமாகக் கொல்லப்பட்ட காட்சிகளையும் கண்டும் கேட்டும் அமைதினை இழந்துபோன மனங்கள் இடையே இயேசு பாலனின் பிறப்பினை நாம் நினைவு கூரவும் கொண்டாடவும் ஆயத்தமாகின்றோம். ரஸ்யா - உக்ரேன் யுத்தம் சகோதரர்களுக்கிடையேயான யுத்தம். இஸ்ரேல் - பாலஸ்தீன யுத்தம்கூட சகோதரருக்கிடையிலான யுத்தம். அதிலும் இயேசு பிறந்து, வளர்ந்து, பணியாற்றிய இடங்கள் - புனித

(04ஆம் பக்கம் பார்க்க)




**உதயதாரகையின்**
**கிறிஸ்து பிறப்பின் வாழ்த்துக்கள்**

## அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின்
# புதிய உத்தியோகஸ்தர் தெரிவு



கடந்த மே மாதம் 20ம் திகதி மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் நடைபெற்ற 11வது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்தொடரினுடைய இரண்டாம் நாள் அமர்வின் இறுதிப் பகுதியில் மட்டக்களப்பு பரி.யோவான் தொழிற்பயிற்சி நிலையத்தின் அதிபர் திரு.சேவியர் தற்காலிகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு அவர் தலைமையில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய உத்தியோகஸ்தர்களுக்கான தெரிவு நடைபெற்றது.

இதில் ஏழாலை தெற்குத் திருச்சபையில் பணிபுரிந்து கொண்டிருந்த அருட்பணி A.S. தேவகுணானந்தன் அவர்கள் புதிய தலைவராகவும், கிளிநொச்சி கிறிஸ்து அரசர் ஆலயத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அருட்பணி A.B. தேவதாஸ் அவர்கள் செயலாளராகவும், யாழ்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பணிமனையில் பணியாற்றிவரும் திரு. I. அருள்றொகான் அவர்கள் உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். முன்கூட்டியே தெரிவு செய்யப்பட்டு பொருளாளராகக் கடமையாற்றி வரும் ஷோபி இன்ரநசனல் லங்கா நிறுவனத்தின் இயக்குனரான திரு. N. K. ரமேஸ்குமார் தொடர்ந்தும் பொருளாளராக ஏற்றுக்கொள்ளப் பட்டார்.

புதிய உத்தியோகஸ்தர்களாகப் பொறுப்பேற்றவர்களை வரவேற்கும் நிகழ்வும் கடந்த ஏழு வருடங்களாகத் தலைவராகப் பணியாற்றிய அருட்பணி T. தேவநேசன் மற்றும் செயலாளராகப் பணியாற்றிய அருட்பணி J. அன்ரனி சுதாகர், உபதலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் A. C. தவரஞ்சிற் ஆகியோருக்கு நன்றிகூறும் வைபவமும் தொடர்ந்து நடைபெற்றது. இந்த நிகழ்வுடன் 11வது வருடாந்தப் பொதுக் கூட்டத் தொடரானது புதிய தலைவர் அருட்பணி A.S. தேவகுணானந்தன் அவர்களுடைய செபத்துடனும் ஆசீர்வாதத் துடனும் இனிதே நிறைவுபெற்றன.

### சிறப்புற நடந்தேறிய அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின்
# 11ஆவது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்தொடர்

கடந்த மே மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் பதினோராவது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்தொடர், அதன் தலைவர் அருட்பணி. தேவசகாயம் தேவநேசன் அவர்கள் தலைமையில் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது.



ஆரம்ப வழிபாட்டில் இலங்கைத் திருச்சபையின் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி எஸ்.டி. பரிமளச்செல்வன் அவர்கள் இறை செய்தியினைப் பகிர்ந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து மௌன அஞ்சலிகள், வாழ்த்துரைகள், வரவுப் பதிவு, தலைவர் உரை, வருடாந்த அறிக்கை, செயற்குழுக் கூட்ட அறிக்கைகள், பிராந்திய மன்றங்களின் அறிக்கைகள், கணக்கறிக்கைகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டு கருத்துப் பகிர்வுகளுடனும், புதிய தீர்மானங்களுடனும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.



மாலை 4.30 மணியளவில் இறையாசியுடன் கூட்டங்கள் நிறைவு பெற்றன.

*ஆசிரியர் பேனாமுனையில்...*

### உள்ளதின் கொண்டாட்டமல்ல, உள்ளமதின் கொண்டாட்டமே உன்னதர் எதிர்பார்ப்பு!!!!

திரும்பவும் ஒரு திருவருகைக் காலத்துக்குள் பிரவேசிக்கப் போகிறோம். கொண்டாடி மகிழ்வதற்கு மாத்திரமே இந்த நாட்கள் என்பது பல்வேறு வேளைகளிலும் எமது எண்ணமாக புதைந்து கிடக்கிறது. திருவருகைக் காலத்தினுள் கொண்டாடி மகிழும் கிறிஸ்து பிறப்பிற்குப் பின்னால் உள்ள மறை உண்மைகளையும் தரிசன வீச்சுக்களையும் உய்த்துணர ஏனோ பல்வேறு வேளைகளிலும் பின் நிற்கிறோம். மாட்டுத் தொழுவத்தில் பிறந்த மானிடமகனின் பிறந்த நாளுக்கு எம்மால் எவ்வளவு செலவுகளைச் செய்து விழாக்களை எடுக்க முடியுமோ, அவ்வளவு செலவுகளைச் செய்து விழாக்கள் எடுப்பதோடு மானிட மகனின் பிறப்பின் உணர்வு எமக்குள்ளே அடங்கிப் போகிறது.

எந்த பாடசாலையாக இருந்தாலும், ஸ்தாபனமாக இருந்தாலும் அங்கு இரண்டு முக்கிய வீச்சுக்கள் இருக்கும் என்பது கண்கூடு கடைப்பிடிக்காவிட்டாலும் அவற்றைத் தமது சுவர்களில் பொதித்து வைத்திருப்பார்கள். கிறிஸ்துவை நேசிக்க அழைக்கப்பட்ட நம் அனைவருக்கும் இந்த இரண்டு முக்கிய அம்சங்களும் இருக்க வேண்டும் என்பதே மானிட மகனின் எதிர்பார்ப்பு. அந்த இரண்டும் என்னவெனில், முதலாவது – தூர நோக்குக் கூற்று (VISION STATEMENT) இரண்டாவது – பணிக் கூற்று (MISSION STATEMENT)

இயேசுகிறிஸ்துவின் தூரநோக்குக் கூற்று (VISION STATEMENT) என்ன என்று நாம் கேட்டால் நாம் கண்ணை மூடிக்கொண்டு விடுதலை அல்லது இரட்சிப்பு என இலகுவாகக் கூறி விடுவோம். அவரது பணிக்கூற்று என்ன? என்ற கேள்விக்கு விடை காணுவதனூடாகவே ஆண்டவர் மனுவுருவெடுத்ததின் பரம இரகசியத்தை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

இயேசு கிறிஸ்துவின் பணிக்காக புடமிடப்பட்ட சோதனைகளின் பின்பு, அவர் தனது பணிகளைத் தொடங்குவதற்கு முன்னதாக, நாசரேத்தூர் ஜெபாலயத்துக்குள்ளே பிரவேசித்து வேதாகம வசனங்களை வாசித்தார். ஏசாயா தீர்க்கனுடைய புத்தகத்தில் இருந்து அவர் வாசித்த பகுதிகளே அவரது பணிக்கூற்றாக (MISSION STATEMENT) இருந்தது எனக் கொள்ளலாம். அதன்படி அவரது பணிக்கூற்று என்ன என்ற கேள்விகளுக்கு விடை காண முயல்வோம்.

1. தரித்திரருக்கு சுவிசேஷம்,
2. இருதயம் நருங்குண்டவர்களுக்குக் குணம்
3. சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை
4. குருடருக்குப் பார்வை
5. நொறுங்குண்டவர்களுக்கு விடுதலை
6. கர்த்தரின் அநுக்கிரக வருடப் பிரசித்தம்.

மேற்கண்ட 6 அம்சங்கள் அடங்கிய பணிக் கூற்றை இயேசு கிறிஸ்து தனது வாழ்வில், தனது குறுகிய ஊழிய கால வருடங்களில் நிறைவேற்றினார் என்பது நாம் அறிந்ததே. இவ்வாறு பரந்த நோக்கம் கொண்ட, குறுகிய எண்ணங்களற்ற இயேசுவின் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள மிசன் பணியாளர்களாக அழைக்கப்பட்டுள்ள நாம் அனைவரும், மேற்கண்ட VISION & MISSION ஐ எமது வாழ்வில் சிரம் மேற்கொண்டு செய்து முடிக்க அழைக்கப்படுகிறோம். அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் கொண்டாடுவோமா? உள்ளத்தில் இறைமகன் பிறக்க இடம் கொடுப்போமா?

## அன்பின் வாசகர்களே!

கடந்த காலத்தில் தங்கள் ஆக்கங்களுக்கூடாகவும் ஜெபங்களுக்கூடாகவும் நன்கொடைகளுக்கூடாகவும் உதவியமைக்கு நன்றிகள். தொடர்ந்தும் தங்கள் ஆக்கங்களை உதயதாரகை இதழுக்கு தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் இத் திருப்பணியை உங்கள் ஜெபங்களுக்கூடாகவும் நன்கொடைகளுக் கூடாகவும் தாங்கும்படியும் அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**
The Editor, The Morning Star, Asia House,
Maruthanarmadam, Chunnakam.
0777 422 207
E.mail : *themorningstar1841@gmail.com*

## புதிய உத்தியோகத்தர்களைத் திருநிலைப்படுத்தும் வழிபாடு

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய உத்தியோகத்தர்களைத் திருநிலைப்படுத்தும் வழிபாடு கடந்த ஜூன் மாதம் 10ஆம் தேதி மாலை 04.00 மணிக்கு தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன் அவர்கள் தலைமையில் உடுவில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் நல்லாயன் தேவாலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.



இதில் மே மாதம் 20ம் தேதி நடைபெற்ற பொதுப் பேரவைக் கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்ட தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன், உபதலைவர் திரு. ஐ. அருள்றொகான், செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ், பொருளாளர் திரு என், கே, ரமேஷ்குமார் ஆகியோர் திருநிலைப்படுத்தப்பட்டு தமது பொறுப்புக்களை உத்தியோபூர்வமாக ஏற்றுக்கொண்டனர். இவ் வழிபாட்டில்



இறை செய்தியினை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் இறையியல் துறைத் தலைவர் அருட்தந்தை கலாநிதி ரவிராஜ் அவர்கள் பகிர்ந்து கொண்டார். ஆலயம் நிறையும்படி மக்கள் கூடி இவ்வழிபாட்டில் கலந்து கொண்டனர். இவர்களுக்கு உதயதாரகை வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## தமிழ்நாட்டு இறையியல் கல்லூரி

### அதிபருடனான சந்திப்பு




06.08.2023 அன்று மாலை பௌத்தலோக மாவத்தையில் உள்ள விருந்தினர் விடுதியில் தமிழ்நாடு இளைஞர் கல்லூரியின் முதல்வர் திருமதி. மாக்கிரட் கலைசெல்வி மோகன் லாபீர் அவர்களுக்கும், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருப்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களுக்கும் இடையிலான ஓர் சிநேகபூர்வமான சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பில் அருட்பணி. ஈ. பி. சொலமன்ஸ் அவர்களும் கலந்து கொண்டார்.

இச் சந்திப்பில் கிறிஸ்தவ இறையியற் கல்லூரிக்கும், தமிழ்நாட்டு இறையியற் கல்லூரிக்கும் இடையில் 2024 இல் நடைபெறவுள்ள பல நிகழ்வுகள் குறித்து இணக்கம் காணப்பட்டது. இரு கல்லூரிகளும் பரஸ்பரம் உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு இச்சந்திப்பு வழி சமைக்கும்.

# புதிய உத்தியோகஸ்தர்களை வரவேற்கும் நிகழ்வுகள்

## மானிப்பாய் திருச்சபை

ஜூன் 04ம் திகதி அன்று ஞாயிறு காலை திருவிருந்து வழிபாட்டினை புதிய தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும், புதிய செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்களும், திருச்சபை அருட்பணி யாளர் அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் அவர்களும் இணைந்து நடாத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து புதிய



உத்தியோகஸ்தர்களை வரவேற்கும் வைபவம் அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன், உபதலைவர் திரு. ஐ. அருள்றோகான், செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ், பொருளாளர் திரு. என். கே. ரமேஸ்குமார் ஆகியோர் பொன்னாடை போர்க்கப்பட்டும் மாலை அணிவிக்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் அருட்பணி. அ. ஜெயக்குமாரன், திரு. ஜே. விக்டர் ஜெகநாதன், திருமதி. ஸ்டெலா டக்ளஸ், செல்வி. திசையினி விஜயரூபன், செல்வன். டானியல் டக்ளஸ் ஆகியோர் புதிய உத்தியோகஸ்தர்களை வாழ்த்திப் பேசினார்கள்.

## ஏழாலை தெற்குத் திருச்சபை

புதிய உத்தியோகஸ்தர்களை வரவேற்கும் வைபவம் 11.06.2023, ஞாயிறு காலை 7.30 மணிக்கு ஏழாலை மைலங்காட்டு வீதி சந்தியில்



இருந்து இசைஅணிவகுப்புடன் பவனி ஆரம்பமாகி நடைபெற்றது. வழிபாட்டினைத் தொடர்ந்து புனரமைக்கப்பட்ட ஆலய பிரதிஸ்டையும் ஞாபகார்த்த கல் திரை நீக்கமும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து புதிய உத்தியோகஸ்தர்கள் வரவேற்கப்பட்டனர். இவ் வைபவம் காலை ஐக்கிய ஆகாரத்துடன் நிறைவு பெற்றது.

## சமாதானபுரம் திருச்சபை

வன்னி பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. ஆர். ஜோன்செல்வம் தலைமையில் சமாதானபுரத்தில் நடைபெற்ற மிசன் இல்ல மீள் பிரதிஷ்டை வழிபாட்டின் பின்னர் புதிய உத்தியோகத்தர்களை வரவேற்கும் வைபவம் சிறப்பாக நடைபெற்றது. இந்த வைபவத்தினை திருச்சபையின் அருட்பணியாளர் சகோதரன் ரி சுசேந்தன் தலைமை தாங்கி நடத்தினார். உத்தியோகத்தர்கள் மாலை அணிவிக்கப்பட்டும், பொன்னாடை போர்க்கப்பட்டும் கௌரவிக்கப் பட்டனர். ஐக்கிய தேனீர் விருந்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

## தெல்லிப்பளைத் திருச்சபை

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய உத்தியோகஸ்தர்களை வரவேற்கும் நிகழ்வைத் தெல்லிப்பளை திருச்சபையானது, தனது 207 ஆவது அகவை நிறைவு விழாவில்



முன்னெடுத்தது. இதன்போது புதிய உத்தியோகத்தர்களுக்கு மாலை அணிவித்து நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. சபைமக்கள் புதிய உத்தியோகத்தர்களை மனமார வாழ்த்தி வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து அமெரிக்கன்



சிலோன் மிசன் திருச்சபையின் உப தலைவர் திரு. ஐ. அருள்றொகான் அவர்களும், செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்களும் ஏற்புரையை வழங்கித் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## கொழும்புத் திருச்சபை

06.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 07:30 மணிக்கு தெகிவளையில் அமைந்துள்ள கொழும்பு சி.ஏ.சி.எம் திருச்சபையில் நடைபெற்ற வழிபாட்டில் சி.ஏ.சி.எம் திருச்சபையின் புதிய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். வழிபாட்டை திருச்சபை அருட்பணியாளர் அருட்பணி. பி. ராஜன் றொகான் அவர்களுடன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும், செயலாளர் அருட்பணி . ஏ. பி. தேவதாஸ் அவர்களும் இணைந்து நடாத்தினர். தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் இறை செய்தியை பகிர்ந்து கொண்டார்.



வழிபாட்டினைத் தொடர்ந்து புதிய உத்தியோகத்தர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் முன்னாள் பொருளாளர் திரு. றோய் டபிள்யூ. விஜயரட்ணம் அவர்களும் திருச்சபையின் அருட்பணியாளரும் வரவேற்பு உரையை நிகழ்த்தினார்கள். தொடர்ந்து ஐக்கிய தேனீர் விருந்துடன் நிகழ்வு இனிதே நிறைவு பெறுகிறது.

# சாம் அண்ணனின் 100வது பிறந்தநாள்

## நன்றி செலுத்தும் வழிபாடும் நினைவுப் பேருரைகளும்

மருதனார்மடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் 15-10-2023 அன்று சாம் அண்ணனின் 100 ஆவது பிறந்தநாளையொட்டி ஒரு சிறப்பான நன்றி செலுத்தும் தமிழிசை வழிபாடு ஆச்சிரமத் தொண்டரான அருட்பணி. ஜெரோம் அண்ணன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. நற்கருணை வழிபாட்டினை அருட்பணி. ஜெரோம் அண்ணன் உடன் இணைந்து அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பேரருட்கலாநிதி. வி. எஸ் பத்மதயாளன் அவர்களும் நடாத்தினார்கள்.



நன்றி செலுத்தும் வழிபாட்டினைத் தொடர்ந்து பெரியண்ணன் மண்டபத்தில் சாம் அண்ணனின் 100 ஆவது பிறந்த நாளையொட்டிய நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இதில் வரவேற்பு நடனத்தை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பீட மாணவன் திரு. இ. ஹர்ஷன் சிறப்பான முறையில் அரங்கேற்றினார். அதனைத்தொடர்ந்து வரவேற்புரையை ஜெரோம் அண்ணன் அவர்கள் ஆற்றினார். தொடர்ந்து தலைமை உரையை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பேரருட்கலாநிதி வி. எஸ் பத்மதயாளன் அவர்களும், ஆற்றினர்கள். நினைவுப் பேருரைகளை சிவபூமி அறக்கட்டளை நிதியத்தின் நிர்வாகி கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்களும் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் பேரருட்கலாநிதி. எஸ். ஜெபநேசன் அவர்களும் ஆற்றினார்கள்

இவர்களிருவரும் சாம் அண்ணனின் பசுமையான நினைவுகளையும் சேவைகளையும் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்வில் சுமார் இருநூறுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

***திருச்சபைத் தலைவரின் .....*** (01ஆம் பக்க தொடர்ச்சி)

பூமி என்று நாம் அழைக்கும் பிரதேசங்கள் இன்று சின்னாபின்னமாகிச் சிதறிக் கிடக்கின்றன. இஸ்ரேல் பாலஸ்தீனம் பிரிக்கப்படும்போது இடையே போடப்பட்ட பெரும் சுவர் இயேசு பிறந்த பெத்லகேமை இரண்டாகப் பிரித்தே போடப்பட்டது. இயேசு பிறந்த இடமான பெத்தலகேமே பிளவுண்டு, துண்டாடப்பட்டு அவல நிலையிலே காணப்படுகிறது. இன்றும் இஸ்ரேல், பாலத்தீனம், காசா, மேற்குக் கரை ஆகிய பிரதேசங்களில் மிகவும் மோசமான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மனிதம் மரணித்து விட்டது. மரணங்கள் மலிந்து விட்டன. இதுதான் இன்று நாம் காணப்போகும் கிறிஸ்து பிறப்பின் விரிவான சூழல். எமது மண்ணில் இன்று போதைப்பொருள் கலாச்சாரம், மத்தியில் பல்வேறு கலாச்சார பிளவுகள், இளம் குடும்பங்களின் மரணங்கள், பிரிவுகள், வேலையில்லாப் பிரச்சனை என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. இச்சூழலிலே அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பினை நாம் எப்படிக் கொண்டாட முடியும்.

இயேசு பிறந்த காலத்திலே, அவர் வாழ்ந்த சமூகத்திலே பெரும் பிளவு ஒன்று காணப்பட்டது. அது ஏழை - பணக்காரன்; படித்தவர்கள் - படிக்காதவர்கள் என்பதற்கு அப்பாலே யூதர் - புற இன மக்கள் என்று கூறப்பட்ட ஒரு பிளவு. யூதர்கள் தாம் மாத்திரமே கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் என்றும் மற்றைய இனத்தவர்கள் அனைவருமே குறைவானவர்கள் என்றும் எண்ணினார்கள். யூதர்கள் இவர்களை ஆலயங்களுக்குள் கூட அனுமதிப்பதில்லை. இதனாலேயே இயேசுவைக் குழந்தையாகப் பெற்றோர் எருசலேம் ஆலயத்திற்குக் கொண்டு போன போது, சிமியோன் குழந்தையைக் கையிலேந்தி “புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்மைடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின, உம்முடைய இரட்சணியத்தை (இயேசு குழந்தை) என் கண்கள் கண்டன.” என்று கூறிக் கர்த்தரை துதிக்கின்றான்.

அவரே ஆறுதல் தருபவர்; அவரே சமாதான பிரபு; அவரே என்றுமுள்ள கடவுள் என்ற நம்பிக்கையோடு குழந்தை இயேசுவை எம் உள்ளங்களில் ஏந்திக் கொண்டவர்களாக, நீரே விடுதலை தாரும் என்று பிரார்த்திப்போம்; பிளவுண்ட சமூகங்கள் ஒன்றுபடவும், உடைந்துபோன உறவுகள் ஒன்று சேரவும், வன்முறைகள் ஒழிந்து நல்லெண்ணங்கள் உதயமாகவும்; ஊழல், மோசடிகள் மறைந்துபோய் உண்மை, நீதி மிளிரவும் இறை மகன் வருகை அர்த்தமுள்ளதாட்டும். ஆகவே ஆண்டவர் பிறப்பை ஆடம்பரமின்றி அர்த்தமுள்ளதாகக் கொண்டாடுவோம்.


கிரீன்லாந்து தேசம், மிகவும் குளிரான நாடு. இளம் தம்பதிகளின் முதலாவது ஆண் குழந்தையின் பிறந்தநாள் கொண்டாட்டம். மிகச் சிறப்பாக அதனைக் கொண்டாட எண்ணிய பெற்றோர் தடல்புடலாக ஆயத்தங்களைச் செய்தனர். பிறந்தநாளும் வந்தது. பெற்றோர் ஓடி, ஓடி ஆயத்தங்களைச் செய்தனர். குளிர்நாடு ஆகையினால் மண்டபத்தின் உள்ளே ஹீட்டர் போடப்பட்டிருந்தது. விருந்தினர்கள் வெளியே குளிருக்குப் போட்டிருந்த அங்கிகளைக் கழற்றி உள்ளே வரும்போது ஓரிடத்தில் கொழுவி விடுவார்கள்.

அனேகர் பிள்ளையைத் தூக்கி விளையாடிக் கொண்டிருந்தனர். பெற்றோர் கேக், அலங்காரங்களில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். கேக் வெட்டும் நேரமும் நெருங்கி வந்தது. எல்லோரும் ரெடி மக்கள் கூட்டம் மண்டபத்தை நிரப்பி இருந்தது. பிள்ளையைக் காணவில்லை. அங்கும் இங்கும் தேடினார்கள். பிள்ளையைக் காணவில்லை. குளிருக்குப் போடும் அங்கி கொழுவியிருக்கும் ராக்கை பாரம் தாங்காமல் விழுந்து கிடந்ததை ஒரு முதியவர் கண்டு சொல்ல அதை அகற்றினார்கள். அப்பொழுது தான் பிறந்தநாள் குழந்தை அந்த உடைகளின் அடியிலே மயங்கியிருந்ததைக் கண்டு கொண்டனர்.

இப்போது கேக் ரெடி; மண்டபம் ரெடி; அலங்காரங்கள் பிரமாதம்; சிற்றுண்டிகளுக்குச் சிறப்பான இடம் ஆனால் கேக் வெட்ட வேண்டிய குழந்தை இப்போ வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தது.

நீண்ட வருடங்களாக எங்களுடைய கிறிஸ்மஸுக்கும் இதே நிலைதான். அலங்காரங்கள்; ஆடம்பரங்கள்; களியாட்டங்கள் களைகட்டியிருக்கும். ஆனால் பிறக்கும் குழந்தை யேசுவைக் கவனிக்க யாருமில்லை அர்த்தமில்லாத கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை நாம் கொண்டாடியிருக்கிறோம். குழந்தை எங்கள் உள்ளங்களில் வந்து பிறக்க குடில் அமைப்போம். உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ், புது வருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

# அருட்பணி. ஏ. வி. இயேசுதாசன்



இவர் வடமராட்சி கிழக்கை சேர்ந்த உடுத்துறை என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் உடுத்துறையைச் சேர்ந்த திரு. கந்தையா ஆறுமுகம் என்பவருக்கும் திருமதி. மேரி சிவகாமிப்பிள்ளை ஆறுமுகம் என்பவருக்கும் இரண்டாவது மகனாக 08.04.1939 இல் பிறந்தார். ஏ. வி. ஐயா என அன்பாக அழைக்கப்படும் இவருடைய முழுப்பெயர் ஆறுமுகம் வேலாயுதம் இயேசுதாசன் என்பதாகும்.

இவர் தன்னுடைய ஆரம்பக் கல்வியை உடுத்துறை ஆரம்பப் பாடசாலையிலும் யாழ்ப்பாணம் பரி. யோவான் ஆரம்ப பாடசாலையும் கற்றார். இடைநிலைக் கல்வியை கொழும்புத்துறை பரி. ஜோசப் வித்தியாலத்திலும் உயர்கல்வியை நெடுந்தீவு மத்திய மகாவித்தியாலத்திலும் பெற்றுக்கொண்டார். பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இவர். முரசுமோட்டையில் உள்ள நவஜீனத்திலே தங்கி அதன் ஸ்தாபகர் அருட்பணி. ஏ. சி. தம்பிராஜா அவர்களின் வழிகாட்டலில் இறைபணியினைச் செய்து, அவ்வுருவாக்கத்திலே இறையழைப்பினைப்

(15ஆம் பக்கம் பார்க்க)

# சாம் அண்ணனின் 100வது பிறந்தநாளை முன்னிட்டு கல்லறையில் அஞ்சலி

கடந்த அக்டோபர் மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை சாம் அண்ணனின் 100வது பிறந்தநாள் அன்று அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன், செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ், இறையியல் கல்லூரி அதிபர் அருட்பணி. ஏ. கமலகுமாரன், இறையியல் கல்லூரியின் மாணவர் நலன் காப்பாளர் அருட்பணி. ஜே. ஞானபிரகாசம், இறையியல் கல்லூரி விரிவுரைவாளரும் பண்டத்தரிப்பு திருச்சபையின் ஊழியருமான அருட்பணி. ஜே. தேவருட்செல்வம் ஆகியோர், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் இறையியல் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து சாம் அண்ணனின் கல்லறையில் அஞ்சலி செலுத்தி நன்றி ஜெபங்களை ஏறெடுத்தார்கள்.





இதன் போது அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் சாம் அண்ணனின் அர்ப்பணிப்பான வாழ்வு குறித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். குறிப்பாக சாம் அண்ணனே இறையியல் கல்லூரியின் முதலாவது மாணவர் காப்பாளர் என்ற செய்தியையும் அவர் பகிர்ந்து கொண்டார்.

# புதிய ஏற்பாட்டில் புதிய மொழிபெயர்ப்பு

கடந்த மே மாதம் 26 ஆம் தேதி பாவனையில் உள்ள பழைய தமிழ் வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டினுடைய திருத்திய மொழி பெயர்ப்பினை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு இலங்கை வேதாகம சங்கத்தினால்



ஒழுங்கு செய்யப்பட்டு யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணத்தில் உள்ள திருச்சபைகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இதன்போது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினுடைய புதிய தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் திருமறை மொழிபெயர்ப்புக்களின் அவசியம் குறித்துப் பேருரையினை நிகழ்த்தினார். இதில் தென்னிந்திய திருச்சபையின் யாழ் பேராயத்தினுடைய பேராயர் பேரருட்கலாநிதி. வி. எஸ். பத்மதயாளன் அவர்கள் புதிய ஏற்பாட்டின் திருத்திய மொழிபெயர்ப்பினை வெளியிட்டு வைத்தார்.

## CACM உத்தியோகஸ்தர்களின் திருச்சபை சந்திப்புக்கள்



அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் உத்தியோகஸ்தர் யாவரும் 31.08.2023ம் திகதி வியாழக்கிழமை கல்மடுக்குளம், மறவன்குளம், பூவரசன்குளம், வவுனியா ஆகிய சபைகளை சந்தித்தனர்.

## கித்துள், தும்பளஞ்சோலை விஜயம்



கித்துள் மற்றும் தும்பளாஞ்சோலை திருச்சபைகளுக்கு அலுவலர்கள் செயற்குழுவின் சில அங்கத்தினர்களும் விஜயம் செய்து மக்களைச் சந்தித்து கலந்துரையாடினர். தொடர்ந்து அங்கிருந்தவர்களுடன் இணைந்து வழிபாட்டிலும் ஈடுப்பட்டனர்.

# யாழ், வன்னி பிராந்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் சேவை திருப்பணி மன்றத்தினால் செப்டம்பர் 2ம், 3ம் தேதிகளில் யாழ் மற்றும் வன்னி பிராந்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறை வதிவிடப் பயிற்சியாக கிளிநொச்சி முன்பள்ளி வலயகல்வி அலுவலகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியின் வளவாளர்களாக கிளிநொச்சி மாவட்ட தெற்கு வலய முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளரும் அவரது குழுவினரும் கலந்து ஆசிரியர்களுக்கு கற்பித்தல் மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை வழிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள், சேவை திருப்பணி இயக்குனர் திரு. எஸ். பிரவீன் ஜோசப் அவர்கள்,



உதவி இயக்குனர் அருட்சகோதரன். எஸ். டானியல் செல்வகுமார் அவர்கள், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் கணக்காளர் திரு. எஸ். றோய்ஸ் அவர்கள், சேவை திருப்பணியின் அலுவலக உத்தியோகத்தர் திரு. பி. சசிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 60 ஆசிரியர்கள் கலந்து பயன் அடைந்தனர்.

## ஞான ஒடுக்கம்

21.08.2023ம் திகதி அன்று காலை வழிபாட்டை தொடர்ந்து 9.00 மணியளிவில் யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட அருட்பணியாளருக்கான ஞான ஒடுக்கம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரம சிற்றாலயைத்தில் நடைபெற்றது. இதனை அருட்தந்தையர்கள் மைக்கல் சௌந்தரநாயகம், டேவிட் ஆகியோர் மிகச் சிறப்பாக நடத்தினர். இந்நிகழ்வில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களுடன் திருச்சபையின் அருட்பணியாளர் சிலர் சமூகமளித்தனர்.

## மலையகம் 200

மலையக மக்களின் 200 ஆண்டுகால வாழ்வியலை பிரதிபலிக்கும் கருத்தமர்வும் 3 நாள் கண்காட்சியும் செப்டெம்பர் 15 முதல் 17 வரை தூய.யோவான் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றமும் மட்டக்களப்பு சர்வமத ஒன்றியமும் இணைந்து நடத்திய இந்நிகழ்வில் பெருமளவானோர் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## தலைவரின் வன்னிப் பிராந்திய சந்திப்புக்கள்

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் கடந்த ஆகஸ்ட் 23, 24 திகதிகளில் வன்னி பிராந்தியங்களில் பணிபுரிந்துவரும் அருட்பணியாளர்களை சந்திக்கவும் அவர்களின் நலன்களை விசாரிக்கும் நோக்கிலும் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். தலைவருடன் ஏழாலை வடக்கு திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. ஜெ. ஜெயசீலன் அவர்களும் இணைந்திருந்தார். அருட்பணியாளர்கள் அருட்பணி. எஸ். ஐ. ஆனந்தராஜா, அருட்பணி. எஸ். சதீஸ்குமார்,அருட்பணி. வி. டேவிட் நிருக்சிகன், அருட்பணி. பி. விஜியதாசன் ஆகியோரை சந்தித்தார்.

அத்தோடு கிளிநொச்சி, முறிகண்டி, பாரதிபுரம், செல்வாநகர், கோணாவில், சமாதானபுரம், வன்னேரிக்குளம், ஜெயபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய ஆலயங்களையும் தரிசித்தார்.

# கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் 84வது ஆண்டு நிறைவு

19.08.2023 அன்று காலை 7.00 மணிக்கு மருதனார்மடம், கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் 84ஆவது ஆண்டு நிறைவு நன்றி செலுத்தும் வழிபாடு நற்கருணை வழிபாடாக அருட்பணி ஜெரோம் அண்ணன் தலைமையில் நடைபெற்றது. இவ் வழிபாட்டினை அமெரிக்கன் சிலோன் மிசன்



திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும், தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பேரருட்கலாநிதி. வி. எஸ். பத்மதயாளன் அவர்களும், மெதடிஸ்த திருஅவை யாழ் மாவட்ட அருட்பணியாளர் எஸ். எஸ். ஞானரூபன் அவர்களும், இலங்கை திருச்சபை அருட்பணியாளர் ஞான காருண்யன் அவர்களும் இணைந்து நடாத்தினர். 18 வருடகால இடைவெளியின் பின்னர் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பங்குபற்றலுடன் இந்த வழிபாடு நடைபெற்றுள்ளது என்பது சிறப்பம்சமாகும். காலை ஐக்கியதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அவர்களினால் ஆச்சிரம வரலாறு என்ற தலைப்பில் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

மாலை 02.30 மணிக்கு பெரியண்ணன் மண்டபத்தில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியில்



ஆச்சிரம சமூக பிள்ளைகளின் நிகழ்வுடன் வடலி மாவைகலட்டி மாலைநேர வகுப்பு மாணவர்களும் தங்கள் நிகழ்வை அரங்கேற்றியிருந்தனர்.

# முன்னாள் பேராயர் அருட்கலாநிதி. டீ. ஜே. அம்பலவானர் அவர்களின் 26வது ஆண்டு நினைவு

தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் அருட்கலாநிதி. டீ. ஜே. அம்பலவானர் அவர்களின் 26வது ஆண்டு நினைவையொட்டி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை விசுவாசிகளால் காலை 7:30 மணியளவில் உடுவில் மிசன் கல்லறைத் தோட்டத்திலுள்ள அவரது கல்லறையில் அஞ்சலியும் மற்றும் நன்றி செலுத்தும் வழிபாடும் முன்னெடுக்கப்பட்டது.

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர், உப தலைவர், செயலாளர், திருச்சபையின் முன்னாள் தலைவர், யாழ்ப்பிராந்திய குரு முதல்வர்,




இறையியல் கல்லூரி அதிபர், இறையியல் கல்லூரி மாணவர் நலன் காப்பாளர் உட்பட பிராந்திய அருட்பணியாளர்கள் திருச்சபை விசுவாசிகள் மற்றும் இறையியல் கல்லூரி மாணவர்கள் இணைந்து முன்னாள் பேராயரின் கல்லறைக்கு மலர் அஞ்சலியை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து நன்றி செலுத்தும் வழிபாட்டை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்கள் தலைமை தாங்க, பேராயரின் வாழ்வுக்கு நன்றி செலுத்தி நன்றி ஜெபத்தை இறையியல் கல்லூரி மாணவர் நலன் காப்பாளர் அருட்பணி. ஜே. ஞானப்பிரகாசம் அவர்கள் முன்னெடுத்தார்.

பேராயரின் முன்மாதிரியான பணிக்காகவும் அந்தப் பணிகள் மென்மேலும் தழைத்தோங்கவும் யாழ்பிராந்திய குருமுதல்வர் அருட்பணி.



எம். டி. போல்சுரேஸ் அவர்கள் மன்றாட்டு ஜெபத்தை முன்னெடுக்க, அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் முன்னாள் தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன் அவர்கள் இறுதி ஜெபத்தை முன்னெடுத்தார். இறையியல் கல்லூரி அதிபர் அருட்பணி. ஏ. கமலகுமரன் அவர்கள் வேதவார்த்தைகளை பகிர்ந்துகொள்ள அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் இறைசெய்தியைப் பகிர்ந்து இறையாசியை வழங்கினார். அதனைத் தொடர்ந்து நன்றி செலுத்தும் வழிபாட்டில் கலந்து கொண்ட அனைவரும் தேநீர் விருந்திலே கலந்து கொண்டனர்

# வருகையின் வளையம்

வருகையின் மெழுகுவர்த்திகள் என்பது நீண்டகாலமாகத் திருச்சபையில் அனுசரிக்கப்பட்டு வரும் ஒரு அர்த்தமுள்ள பாரம்பரிய நடைமுறையாகும். இது எவ்வாறு திருச்சபைப் பாரம்பரியத்தில் ஆரம்பிக்கப் பட்டது, எவ்வாறு வளர்ச்சி கண்டது, எவ்வாறு அர்த்தமுள்ளதாகக் காணப்படுகின்றது என்பதற்கு ஒரு உண்மை வரலாறு உண்டு. இச் சம்பவமானது ஜேர்மனி தேசத்தில் உள்ள ஒரு லூத்தரன் விடுதிப் பாடசாலையில் 1839ஆம் ஆண்டில் நடைபெற்றது.



இப்பாடசாலையிலே சிற்றாலயக் குருவாக இருந்தவர் Johann Hinrich Wichern (1808 – 1881) ஆவார். இவரிடம் விடுதியில் இருந்த மாணவர்கள் ஒவ்வொருநாளும் "Father, கிறிஸ்மஸ் எப்போ வரும்" என்ற கேள்வியினைத் திரும்பத் திரும்பக் கேட்பார்கள். அவர்களுக்குப் பதில் கூறிச் சலிப்புற்ற இக்குருவானவர் அப்பாடசாலையில் அமைந்திருந்த சிற்றாலயத்துக்கு முன்பாக ஒரு பழைய வண்டில் சில்லினை சாய்வாக நிறுத்தி அதில் கிறிஸ்மஸ்க்கு முன்வரும் 4 வாரங்களினை (ஒரு மாதம்) கணக்கிடுவதற்காக 20 சிறிய மெழுகுவர்த்திகளை நட்டு வைத்தார். அம்மெழுகுவர்த்திகள் வண்டில் சில்லினை நான்காகப் பிரித்து வரும் ¼ வட்டத்தில் 05 மெழுகுவர்த்திகள் என்ற வகையில் நாட்டப்பட்டிருந்தன.

வார நாட்களில் ஒவ்வொரு நாளும் சிற்றாலய வழிபாடு ஆரம்பமாவதற்கு முன்னர் ஒரு மாணவன் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றுவான். இவ்வாறு திங்கள் முதல் வெள்ளி வரை மெழுகுவர்த்திகள் 04 கிழமையும் ஏற்றப்பட்டு, எரிந்து முடிந்தவுடன் கிறிஸ்மஸ் வந்து விடும். மாணவர்களுக்கும் அவர்களாகவே கிறிஸ்மஸ் எப்போ வரும் என்று கணக்கிடுவதற்கு இது இலகுவாக இருந்தது. மாணவர்களும் மகிழ்ச்சியுடன் இதனை நடைமுறைப்படுத்தி வந்தனர். மாதங்கள் ஓடி மறைய இந்நடைமுறையானது ஜேர்மனியில் உள்ள எல்லா லூத்தரன் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அர்த்தமுள்ள இந்த கிறிஸ்து பிறப்பினைக் கணக்கிடும் வளையமும் மெழுகுவர்த்திகளும் ஆண்டுகள் ஓடி மறைய ஜேர்மனியில் இருந்த ஆலய வழிபாடுகளுக்குள் இடம் பிடித்துக் கொண்டன. ஆனால் இது ஆலய வழிபாடுகளுக்குள் உள்ளவாங்கப்படும்போது வண்டில் சில்லுக்குப் பதிலாக சிறிய வளையமும் 20 மெழுகுவர்த்திகளுக்குப் பதிலாக 04 ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஏற்றக் கூறியவாறு 04 மெழுகுவர்த்திகளும் பாவிக்கப்பட்டன. அத்துடன் இவ்வளையமானது பச்சைநிற இலைகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டும் காணப்பட்டது 19ம் நூற்றாண்டு வரை ஜேர்மனி தேசத்தின் எல்லாப் பாடசாலைகளையும் தேவாலயங்களையும் அலங்கரித்த இந்த வருகையின் வளையமானது, 20ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவுக்குள் பிரவேசித்தது. அவ்வேளையில் இவ்வருகையின் வளையத்தில் ஒரு மாற்றம் கொண்டு வரப்பட்டது. ஞாயிறு வழிபாடுகளில் எற்றுவதற்காக அமைக்கப்பட்ட 04 மெழுகுவர்த்திகளுடன் நடுவில் கிறிஸ்மஸ் நாளன்று எற்றுவதற்காக மேலும் ஒரு உயரமான வெள்ளை நிற மெழுகுவர்த்தியும் இணைக்கப்பட்டது. இன்று இவற்றினை உலகம் முழுவதுமுள்ள திருச்சபைகள் அர்த்தமுள்ளதாக அனுசரித்து வருகின்றன. அவ்வகையில் பின்வரும் அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**வளையம்** -கடவுளின் முடிவில்லா அன்பு
**பச்சை அலங்காரம்** - வளமான வாழ்வு

1ம் மெழுகுவர்த்தி (வருகையின் 1ம் ஞாயிறு)
நம்பிக்கையின் மெழுகுவர்த்தி
Candle of Hope – ஊதா நிறம் (Purple)

2ம் மெழுகுவர்த்தி (வருகையின் 2ம் ஞாயிறு)
அன்பின் மெழுகுவர்த்தி
Candle of Love – ஊதா நிறம் (Purple)

3ம் மெழுகுவர்த்தி (வருகையின் 3ம் ஞாயிறு)
மகிழ்ச்சியின் மெழுகுவரத்தி
Candle of Joy – Pink

4ம் மெழுகுவர்த்தி (வருகையின் 4ம் ஞாயிறு)
சமாதானத்தின் மெழுகுவர்த்தி
Candle of Peace – ஊதா நிறம் (Purple)

5ம் மெழுவர்த்தி (கிறிஸ்து பிறப்பின் நாள்)
மீட்பின் மெழுகுவர்த்தி
Candle of Salvation – வெள்ளை நிறம் (White)

# பிராந்திய நிகழ்வுகள்

## கிழக்குப் பிராந்திய பிள்ளைகள் விழா

கிழக்குப்பிராந்தியத்தின் வருடாந்த பிள்ளைகள் விழா இவ்வாண்டு **"நன்மை செய்யுங்கள், நீதியைத் தேடுங்கள் "** (ஏசாயா 1:17) என்ற மகுடவாக்கியத்திற்கிணங்க,



செப்டெம்பர் 30 2023, சனிக்கிழமை அன்று, காலை 8 மணிக்கு பரி.யோவான் ஆலயத்தில் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. மணி. லூக்ஜோன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பவனியுடன் ஆரம்பமாகிய இவ்விழாவில்



பிள்ளைகளினால் வழிபாடு நடாத்தப்பட்டது. இறைவார்த்தையை திருமதி. லதா நிவில் ரூபராஜ் வழங்கினார். வழிப்பாட்டைத் தொடர்ந்து போட்டி நிகழ்வுகளும் பின்னர் கலை நிகழ்வுகளும் பரிசளிப்புக்களும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தனிப்பாடல், குழுப்பாடல் போட்டிகளும், மற்றும் பேச்சு போட்டியும் வேதாகம புதிர்ப்போட்டியும் நடைபெற்றன. ஏற்கனவே நடந்து முடிந்த, நிகழ்வுகளான மனனவசனம் ஒப்புவித்தல், கட்டுரை எழுதுதல், கவிதை எழுதுதல், சித்திரம் வரைதல் போன்ற நிகழ்வுகளுக்கான பரிசில்கள் அன்றைய தினம் பகிர்ந்தளிக்கப்பட்டன.

குறிப்பாக, இந்நிகழ்வில் நடைபெற்ற குழுப்பாடல் போட்டிகளில்,

- 1ம் இடம் - தூய.யோவான் ஆலயம், ஊறணி



- 2ம் இடம் - தூய.அந்திரேயா ஆலயம், பெரியநீலாவணை
- 3ம் இடம் - தூய.தோமா ஆலயம், முறக்கொட்டான்சேனை
- 4ம் இடம் - தூய.மாற்கு ஆலயம் (இறாலோடை) – தூய.பிலிப்பு ஆலயம் (கோப்பாவெளி)

போன்ற திருச்சபைகள் பெற்று, தங்களுக்கான கேடயங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேலும், வேதாக புதிர்ப்போட்டி நடைபெற்றது, அப்போட்டிகளில்,

9வயது பிரிவில்,

- 1ம் இடத்தை, தூய.அந்திரேயா திருச்சபை – பெரியநீலாவணை பிள்ளைகள் பெற்றுக்கொண்டனர்.
- 2ம் இடத்தை, தூய.யோவான் திருச்சபை – ஊறணி பிள்ளைகள் பெற்றுக் கொண்டனர்.

12வயது பிரிவில்,

- 1ம் இடத்தை, தூய.தோமா திருச்சபை – முறக்கொட்டான்சேனை பிள்ளைகள் பெற்றுக்கொண்டனர்.
- 2ம் இடத்தை, தூய.அந்திரேயா திருச்சபை பிள்ளைகள் பெற்றுக்கொண்டனர்.
- 3ம் இடத்தை, தூய.யோவான் திருச்சபை – ஊறணி பிள்ளைகள் பெற்றுக் கொண்டனர்.

15 வயது பிரிவில்,

- 1ம் இடத்தை, தூய.யோவான் திருச்சபை – ஊறணி பிள்ளைகள் பெற்றுக் கொண்டனர்.
- 2ம் இடத்தை, தூய.அந்திரேயா திருச்சபை – பெரியநீலாவணை பிள்ளைகள் பெற்றுக்கொண்டனர்.

18 வயது பிரிவில்,

- 1ம் இடத்தை, தூய.யோவான் திருச்சபை – ஊறணி பிள்ளைகள் பெற்றுக் கொண்டனர்.
- 2ம் இடத்தை, தூய.அந்திரேயா திருச்சபை – பெரியநீலாவணை பிள்ளைகள் பெற்றுக்கொண்டனர்.

குறிப்பாக இப்போட்டியில், 12 வயது பிரிவில், முதற்தடவையாக தூய.தோமா திருச்சபை – முறக்கொட்டான்சேனை திருச்சபை பிள்ளைகள் வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை



இம்முறை பதிவு செய்திருப்பது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிராந்தியத்திலுள்ள சிறிய சபைகளும் வளரத் தொடங்கியுள்ளன என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். இந்நிகழ்வுகளை அருட்சகோ.செல்வகுமார் சிறப்பாக ஒழுங்குபடுத்தயிருந்தார்.

## 19வது ஆண்டு விழா

### பெரியநீலாவணை புனித அந்திரேயா ஆலயம்

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் கிழக்கு பிராந்திய திருச்சபையான பெரியநீலாவனை புனித அந்திரேயா தேவாலயத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவுவிழா



12.08.2023 ம் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு தேவாலயத்தில் நடைபெற்றது. சபைக் குருவானவர் அருட்பணி. எஸ். ஜோன் புவியரசன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆராதனையில் கலந்து கொண்ட திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் 1 கொரிந்தியர் 03ம் அதிகாரத்தில் ***நீங்களே தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள்.*** எனும் பொருளின் இறை செய்தியை பகிர்ந்து கொண்டார்.

பின்னர் சி.ஏ.சி.எம் மத்திய அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. எஸ். யோன் புவியரசன் தலைமையில் பொதுக்கூட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் திருச்சபையின் தலைவர் அவர்களினால் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை வரலாறு தொகுப்பினை காட்சிகளின் உதவியுடன் எடுத்துரைத்தார். தொடர்ந்து ஐக்கிய மதிய போசனத்துடன் நிகழ்வுகள் நிறைவேறின.

## திருமுழுக்கு

25.06.2023 அன்று ஞாயிறு காலை 7:30 மணிக்கு மட்டக்களப்பில் அமைந்துள்ள தூய யோவான் ஆலயத்தில் திருச்சபையின் அருட்பணியாளரும் கிழக்கு பிராந்திய குருமுதல்வருமான அருட்பணி. எம். லூக்ஜோன் அவர்களுடைய தலைமையில் வழிபாடு



நடைபெற்றது. இந்தக் காலை திருவிருந்து வழிபாட்டில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களால் கித்துள், தும்பலாசோலை திருச்சபையின் அருட்பணியாளரான அருட்பணி. எஸ். செல்வகுமார் மற்றும் முறக்கொட்டாஞ்சேனை திருச்சபையின் அருட்பணியாளரான அருட்பணி. எஸ். பியூரா செல்வகுமார் அவர்களுடைய குழந்தை செவிசன் அவர்களுக்குத் திருமுழுக்குக் திருச்சபையின் தலைவரால் கொடுக்கப்பட்டது.

## சாட்சிய சைக்கிள் பவனி சத்தியபுரம்

தூய பவுல் ஆலயம் சத்தியபுரம் திருச்சபை தன்னுடைய 39 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாட்சிய சைக்கிள் பவனி ஒன்றை சத்தியபுரம் திருச்சபை சமூகமாக முன்னெடுத்தனர். இப்பவனியானது 23-9-2023 அன்று காலை 06 மணியளவில் சத்தியபுரம் திருச்சபையில் இருந்து அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை யாழ் பிராந்தியம் குருமுதல்வர் அருட்பணி. எம்.டி. போல் சுரேஷ் அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமானது. இச்சாட்சியபவனி உடுவில் ஊடாக மருதனார்மடம் சந்தியை வந்தடைந்தது. அங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக இணுவில், கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியால் திரும்பி ஆனைக்கோட்டை சந்தியை வந்தடைந்தது. அங்கிருந்து மானிப்பாய் ஊடாக சத்தியபுரம் கிராமங்களுக்குள்ளாக தனது பயணத்தை மேற்கொண்டு ஆரம்ப இடத்தை வந்தடைந்தது. இதில் சத்தியபுரம் திருச்சபை விசுவாசிகளுடன் இணைந்து திருச்சபையின்



குருவானவர் அருட்பணி. கே. அன்ரூ ஜெயானந்தம் அவர்களும் மானிப்பாய் திருச்சபையின் ஊழியனும், மண்ணின் மைந்தனுமான அருட்பணி. எம். எஸ். மதியாபரணம் அவர்களும் யாழ் பிராந்திய வாலிபர்பணி இணைப்பாளர் திரு. ஆர். சுஜந்தன் அவர்களும் சாட்சிய பவனியில் கலந்து சிறப்பித்தனர். மேலும் இச் சாட்சிய பவனியில் ஞாயிறு பாடசாலைகள் முதல் திருச்சபையின் மூத்த உறுப்பினர்கள் வரை உற்சாகமாக கலந்து கொண்டார்கள் என்பது சிறப்பு அம்சமாகும்.

## *சமாதானபுரத்தில் மிசன் இல்லம் புனரமைப்பு*




சமாதானபுரம் (அக்காராயன்குளம்) பகுதியில் உள்ள அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபைக்கான மிஷன் இல்லம் அழகுற புனரமைப்பு செய்யப்பட்டு 28 ஜுன் மாதம் 2023 இல் வன்னிப் பிராந்தியக் குருமுதல்வர் அருட்பணி. ஆர். ஜோன் செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் சி.ஏ.சி.எம் இன் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந்த மிசன் இல்லம் முன்பு இரண்டு அறைகளை மட்டுமே கொண்டிருந்தது. தற்போது வசதியான முறையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. திருச்சபை மக்கள், வன்னி பிராந்தியத் குருமார்கள், மெதடிஸ்த திருச்சபை குரு என்போர் கலந்து கொண்டனர்.

# திடப்படுத்தல்

03.09.2023ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு பூவரசன்குளம் திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. ஆர். ஜோன் செல்வம் அவர்களுடன் இணைந்து அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும் திடப்படுத்தல் வழிபாட்டினை நடத்தியதுடன் '***நீங்களே தேவனுடைய ஆலயம்***' எனும் பொருளில் இறைசெய்தியை பகிர்ந்து கொண்டார்.



இதன் போது 14 பேர் திடப்படுத்தல் பெற்று திருச்சபையின் முழு அங்கத்தவராக இணைக்கப்பட்டனர்.

# விடுமுறை வேதாகமக்கல்வி



மலையகம் மற்றும் கொழும்பு பிராந்திய விடுமுறை வேதாகமபாடசாலை 30.09.2023 ஆம் தேதி சனிக்கிழமை உடப்புசல்லாவ அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்வேதாகம பாடசாலையை கொழும்பு திருச்சபையும் இணைந்து முன்னெடுத்திருந்தது. இதன் போது சுமார் நாற்பதுக்கும் அதிகமான பிள்ளைகள் கிறிஸ்துவின் வழியில் நடக்க கற்பிக்கப்பட்டனர்.

# யாழ் பிராந்திய வாலிபர் பாசறை – 2023

*"மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன்னைத்தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? "*

*லூக்கா 09:25*



என்ற பல கேள்விகளோடு எது லாபம் என்ற என்ற தொனிப்பொருளில் பல சிந்தனைகளோடும், திறமைகளோடும் காரைநகர் திருச்சபையை நோக்கி களம் இறங்கியது யாழ் பிராந்திய வாலிபர் அணி. செப்டம்பர் மாதம் 28ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி வரை காரைநகர் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையில் நடைபெற்ற யாழ் பிராந்திய வாலிபர் பாசறையானது வாலிபர்களின்



திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு களமாக மாறியது. துதிப்பாடல்கள், திருமறைப் படிப்புகள், செயலமர்வுகள், விளையாட்டுக்கள், பட்டிமன்றம், வேதாகமப்புதிர்போட்டி, பாசறைத் தீ நிகழ்வுகள், கடற்கரை அனுபவங்கள் என நடைபெற்ற நிகழ்வுகளில் பாசறையில் கலந்து கொண்டு சுமார் 30 வாலிப உள்ளங்களையும் தொட்டது என்பதற்கு அப்பால் ஊக்குவிப்புப் பரிசில்களும், நினைவுச்சின்னங்களும் அவர்களின் திறமைகளுக்கு உந்துதலாக அமைந்தது.

இப்பாசறையை யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல்சுரேஷ் அவர்களதும், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் வாலிபர்பணி இணைப்பாளர் அருட்பணி. எம். ஜெயானந்தராசா அவர்களதும் வழிநடத்தலில் யாழ் பிராந்திய வாலிபர்பணி இணைப்பாளர் திரு. ஆர். சுஜந்தன் அவர்கள் முன்னெடுத்தார். வாலிபர்களின் ஒற்றுமையே திருச்சபையின் பலம். அதுவே வாலிபர்களின் வாழ்வில் சிறந்த லாபம். இது நின்றுபோகும் பணியல்ல, புதிய வாலிபர் தலைவர்களை உருவாக்கவும், அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரவும் வாலிபர் பணியானது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்க வேண்டும்.

புயல் போன்ற தடைகள் வந்தாலும் சரித்திரம் படைக்க இன்றும் காத்துக் கொண்டிருக்கும் யாழ் பிராந்திய வாலிபர் பணிக்கு உதயதாரகை குடும்பத்தின் பாரட்டுக்கள்

## தெல்லிப்பளை திருச்சபையின் 207வது அகவை விழா

தெல்லிப்பளை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையானது தனது 207வது அகவையினை கடந்த 14 அக்டோபர் 2023 அன்று வெகு விமர்சையாகக் கொண்டாடியது. காலை 8 மணியளவில் மிசன் கல்லறைத் தோட்டத்தில் மிசன் அஞ்சலி வழிபாட்டுடன் நிகழ்வுகள் ஆரம்பித்தன. அஞ்சலி வழிபாட்டைத் தொடர்ந்து விசுவாசிகள் சாட்சியின் பவனியாக தெல்லிப்பளை தேவாலத்துக்குள் வந்ததும் நன்றி செலுத்தும் நற்கருணை ஆராதனை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வழிபாட்டைத் திருச்சபை ஊழியனான அருட்பணி. ரி. ஈ. அசோக்குமார் அவர்களுடன் இணைந்து யாழ் பிராந்தியத்தின் குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல்சுரேஷ் அவர்கள் முன்னெடுத்தார். நற்கருணை வழிபாட்டை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் முன்னெடுத்ததுடன் இறைசெய்தியையும் பகிர்ந்து கொண்டார். இவ் வழிபாடு முழுவதும் தமிழிசை வழிபாடாக முன்னெடுக்கப்பட்டது.



இவ்வழிபாடு மிகச் சிறப்பாக அமையபெற்றது என்றும், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் வரலாற்றில் இது முதலாவது தமிழிசை வழிபாடாக அமையபெற்றது என்றும், பலரின் பாராட்டைப்பெற்றது. வழிபாட்டைத் தொடர்ந்து ஆசியுரைகள், வாழ்த்துரைகள், திருச்சபையின் வரலாற்றுப் பதிவுகள், கலை நிகழ்சிகள் என்பன இடம்பெற்றன. மதியம் ஒரு மணியளவில் ஐக்கிய மதியபோசனத்துடன் இவ்விழா இனிதே நிறைவேறியது. இவ்விழாவில் பிராந்தியத்தை சார்ந்த அனேக அருட்பணியாளர்கள் மற்றும் திருச்சபை விசுவாசிகள் கலந்து சிறப்பித்தனர்.

## ஏழாலை தெற்கு திருச்சபையின் 135வது ஆண்டு விழா

ஏழாலை தெற்கு அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் 135 வது ஆண்டு நிறைவு





விழா 29.09.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, திருச்சபை அருட்பணியாளர் அருட்பணி. ரி. தேவநேசன் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் திருவிருந்து ஆராதனையுடன் கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம், வாழ்வாதார கொடுப்பனவு, விளையாட்டுக்கள் என்பன நடைபெற்றன.

## கிறேஸ் ஆலயத்தின் 21வது ஆண்டுவிழா

திருகோணமலை கிறேஸ் ஆலயத்தின் 21வது ஆண்டுவிழா சபைக்குரு அருட்பணி. எஸ். யூட் வினோதன் தலைமையில் ஒகஸ்ட் 31ம் திகதி சிறப்பாக நடைபெற்றது. அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் திருவிருந்து வழிபாட்டை நடத்தி அருளுரையாற்றியிருந்தார்.



அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய அலுவலர்கள் தூய கிறேஸ் ஆலயத்தினரால் வரவேற்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அன்றைய நாளில் திருச்சபையின் புதிய பெயர் பலகை தலைவரினால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் ஆலய மணிக்கோபுரத்திற்கான அத்திவாரக்கல் கடும் மழையின் மத்தியிலும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய அலுவலர்களால் வைக்கப்பட்டது.

## ஞாயிறு பாடசாலையின் வருடாந்த ஒன்றுகூடல்

கொழும்பு திருச்சபையின் ஞாயிறு பாடசாலையின் வருடாந்த ஒன்றுகூடல் 05.11.2023 ஆம் திகதி அன்று பாணந்துறையில் நடைபெற்றது. இதில் ஞாயிறு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுடன் திருச்சபை மூப்பர் சிலர் கலந்து கொண்டு மாத்திரமன்றி மாணவர்களுடன் இணைந்து விளையாடி நிகழ்வை சிறப்பித்தனர். இந் நிகழ்வில் சுமார் 30 பேரளவில் கலந்துக் கொண்டனர்.



## திடப்படுத்தல் ஆராதனை

25.06.2023 அன்று தூய.யோவான் ஆலயம் ஊறணியில் நடைபெற்ற திடப்படுத்தல் ஆராதனை




வழியாக 5 பேர் திருச்சபையின் பூரண அங்கத்துவராயினர். அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் தலைமையில் இவ்வழிபாடு சிறப்பாக நடைபெற்றது.

வழிபாட்டின் பின்னர் புதிய அலுவலர்கள் கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து ஐக்கிய காலை உணவில் திருச்சபை மக்களுடன் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அலுவலர்களும் கலந்துகொண்டனர். ஊறணி திருச்சபையின் செயற்குழுவினரும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அலுவலர்களும் மதிய ஐக்கிய உணவிலும் கலந்துரையாடலிலும் கலந்து கொண்டனர்.

## பூவரசன்குளம் திருச்சபையின் 35வது ஆண்டு நிறைவும் மீள் பிரதிஷ்டையும்

30.08.2023ம் திகதி புதன்கிழமை பூவரசன்குளம் திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. ஆர். ஜோன் செல்வம் அவர்களின்



தலைமையில் 35வது ஆண்டு நிறைவு நன்றி செலுத்தும் வழிபாடு ஏறெடுக்கப்பட்டது. இவ் வழிபாட்டில் ஆலயமீள்பிரதிஷ்டை செய்யப்பட்டு திருவிருந்து வழிபாடு முன்னெடுக்கப்பட்டது.

வழிபாட்டை தொடர்ந்து அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய உத்தியோகஸ்தர்களின் வரவேற்பு நிகழ்வு இடம் பெற்று உத்தியோத்தர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயின்ற பிள்ளைகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் கண்காட்சியும் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள், உபதலைவர் திரு. ஐ. அருள்றொகான் அவர்கள், செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்கள் பொருளாளர் திரு. என். கே. ரமேஸ்குமார் அவர்களுடன் வன்னி பிராந்திய





அருட்பணியாளகள் பலரும் கலந்து நிகழ்வை சிறப்பித்தனர். நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் ஐக்கிய மதிய போசனம் பகிரப்பட்டது.

## நற்செய்திக் கூட்டம் சத்தியபுரம்

செப்டம்பர் மாதம் 22ஆம் தேதி தூய பவுல் ஆலயம், சத்தியபுரம் திருச்சபையின் 39ஆவது அகவை நிறைவை முன்னிட்டு ஆலய முற்றத்தில் நற்செய்திக் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர். நற்செய்திக் கூட்டமானது அமெரிக்கன் சிலோன் மிசன் நகர்பணி திருச்சபையின் ஊழியன் அருட்பணி. எம்.



ஜெயானந்தராசா அவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பமானது. இந்நற்செய்திக் கூட்டத்தை சத்தியபுரம் திருச்சபையின் பாடல் குழாமுடன் இணைந்து கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மாணவர்களான சகோ. பிரகாஷ் அவர்களும் சகோ. எஸ். அற்புதஜீவன் அவர்களும் முன்னெடுத்தனர். இக்கூட்டத்தின் முக்கிய விடயமான நற்செய்தியை கோணவில் மற்றும் செல்வாநகர் திருச்சபையின் ஊழியன், அருட்பணி. டேவிட் நிருக்ஷன் அவர்கள் வழங்கினார். மண்ணின் மைந்தனாகிய அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் அவர்கள் நிறைவு ஜெபத்தில் வழி நடத்த திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. கே. அன்ரூ ஜெயானந்தம் அவர்களும் அருட்பணி. டேவிட் நிருக்ஷன் அவர்களும் தனி செபத்திலும் இறையாசியிலும் வழிநடத்தினர்.

## கிளிநொச்சி திருச்சபையின் மிசன் இல்ல திறப்புவிழா

கிளிநொச்சி நகரில் புகையிரதப் பாதையை அண்டியுள்ள கிளிநொச்சி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் வளாகத்தில் அமைக்கப்பட்ட புதிய மிசன் இல்லம் இறைஆசியுடன் திறந்து வைக்கப்பட்டது.

23.09.2023ம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் பெயர்பலகையை டாக்டர் மற்றும் திருமதி வசந்தி இராஜரட்ணம் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தனர். அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் முன்னாள் தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன் அவர்கள் இறைவேண்டுதலை ஏறெடுக்க தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் இறை ஆசீர்வாதத்துடன் இல்லத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவ கலாநிதி Bow Mills அவர்களும் கலந்துகொண்டார். மிசன் இல்ல கட்டுமானம் மருத்துவ கலாநிதி ஹென்றி இராஜரட்ணம், திருமதி வசந்தி இராஜரட்ணம்



ஆகியோரின் 35 இலட்சம் நிதி உதவியுடன் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடதக்கது. ஆலயம் நிறைந்த மக்கள் கூட்டத்துடன் நடைபெற்ற பொதுக் கூட்டத்தை தொடர்ந்து ஐக்கிய மதிய போசனத்துடன் நிகழ்வுகள் நிறைவேறின.

## நவாலி திருச்சபையின் 163 வது ஆண்டு விழா

நவாலி திருச்சபையின் 163 வது ஆண்டு நிறைவு விழா 19.11.2023, ஞாயிற்றுக்கிழமை காலை 07.30 மணிக்கு திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன், யாழ்



பிராந்திய குரு முதல்வர் அருட்பணி. எம். டி. போல் சுரேஷ் திருச்சபையின் குருவானவர் அருட் பணி. ஜெ. அன்ரனி சுதாகர் ஆகியோர் இணைந்து நடாத்திய கூட்டுத் திருவிருந்து வழிபாட்டுடன் ஆரம்பமானது. இவ் வழிபாடானது சிறப்பான முறையில் தமிழிசை வழிபாடாகவும் அமையப் பெற்றதுடன் இவ்வழிபாட்டில் இறைசெய்தியினை அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் **"உன்னை நீ நேசிப்பது போன்று உனக்கு அடுத்தவர்களையும் நேசி"** என்ற பொருளில் பகிர்ந்து கொண்டார்.

வழிபாட்டினை தொடர்ந்து திருச்சபையின் திறந்த வெளியரங்கிலே கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் 80க்கும் மேற்பட்ட திருச்சபை முதியோர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் கிராமத்தில் இருக்கும் தேவையுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளும் வழங்கப்பட்டன. மேலும் இந்நிகழ்வில் புதிய முயற்சியாக **"அறுவடை"** என்ற பெயரில் சஞ்சிகை வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வுகளுக்கு மகுடம் சூட்டும் வகையில் சிறப்பான வழக்காடு மன்றம் விண்ணரசுக்குள் நுழைவதற்குத் தலையாக விளங்குவது ஆன்மீகப் பணியா? சமூகப் பணியா? என்னும் தலைப்பில் அங்கிலிக்கன் திருச்சபையின் குருவான அருட்பணி. ஸ்டீபன் அருளம்பலம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் அவர்கள் தலைமையில் திரு. அதிசயராஜா, திருமதி. விஜயவாணி பிறின்ஸ் ஜெயதேவன் ஆகியோர் ஆன்மீகப் பணியே? என்றும் அருட்பணி.



எம். ஜெயானந்தராஜா அவர்கள் தலைமையில் திரு. தர்மகுமாரன், திருமதி. அனுஷா தவரஞ்சித் ஆகியோர் சமூகப் பணியே? என்றும் அர்த்தமுள்ள பல வாதங்களை முன்வைத்தனர். இறுதியில் திருமறை அடிப்படையிலும், சமூகப் பார்வையிலும் ஆன்மீகப் பணியும் சமூகப் பணியும் ஒன்றையொன்று தாங்கியிருப்பவை என்றும் இவ்விரண்டு பணிகளுமே இறையரசில் நுழைவதற்குத் தலையானவை என்றும் நடுவரினால் சிறப்பான ஆதாரங்களுடன் முடிவாக அறிவிக்கப்பட்டது. மாலை 03.00 மணியளவில் ஐக்கிய மதிய போசனத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

## சத்தியபுரம் திருச்சபையின் 39வது ஆண்டுவிழா

உடுவில், சத்தியபுரத்தில் அமைந்துள்ள அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை தூய பவுல் ஆலயத்தின் 39வது ஆண்டு நிறைவு விழா 22, 23, 24.09.2023 ஆகிய திகதிகில் விமர்சையாக கொண்டாடப்பட்டது. இதன் இறுதிநாள் நிகழ்வாக 24.09.2023ம் திகதி அன்று ஞாயிறு காலை வழிபாடு திடப்படுத்தல் வழிபாடாக அமெரிக்கன்



சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களால் ஏறெடுக்கப்பட்டது. இவ் வழிபாட்டினை திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. கே. அன்ரூ ஜெயானந்தன் அவர்கள் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் செயளாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்கள் யாழ் பிராந்திய குருமுதல்வர் எம். டி. போல் சுரேஸ் ஆகியோர் இணைந்து முன்னெடுத்தனர். இதன்போது 06 பேர் திடப்படுத்தல் பெற்று திருச்சபையின் முழு அங்கத்தவராக இணைக்கப்பட்டனர்.

வழிபாட்டினைத் தொடர்ந்து யாழ் பிராந்திய குருமுதல்வர் எம். டி. போல் சுரேஸ் அவர்களின் ஆசியுரையுடன் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய



உத்தியோகஸ்தர்களை வரவேற்கும் நிகழ்வு நடைபெற்று அனைவருக்கும் ஐக்கிய மதிய போசனம் பகிரப்பட்டது.

## அளவெட்டித் திருச்சபையின் 170வது ஆண்டு நிறைவு விழா

அளவெட்டி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் 170 ஆவது ஆண்டு நிறைவுக்கான நன்றி செலுத்தும் வழிபாடு 22.10.2023 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்கு திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. எம். டி. போல் சுரேஷ் அவர்களின் தலைமையில்



ஆரம்பமானது. அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் இறைசெய்தியை பகிர்ந்ததோடு திருவிருந்து வழிபாட்டையும் நடத்தினார். தொடர்ந்து அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய அலுவலர்க்களுக் கான வரவேற்பு நிகழ்வும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# யாழ் பிராந்தியப் பிள்ளைகள் விழா

யாழ் பிராந்தியப் பிள்ளைகள் விழாவானது 30.08.2023 அன்று நகர்பணி திருச்சபையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ் பிராந்தியக் குரு முதல்வர் அருட்பணி. எம். டி, போல் சுரேஸ் அவர்களின் வழிகாட்டலில் யாழ் பிராந்திய



சமயக்கல்விக்குழு ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி. சு. சுதாசினி அவர்கள் முன்னேடுத்தார். ஆரம்ப வழிபாடு நகர்பணி திருச்சபைப் பிள்ளைகளால் நடத்தப்பட்டது. இவ் வழிபாட்டில் திருநெல்வேலி புனித சவாரியர் மடத்தை சார்ந்த அருட்சகோதரி ரேவதி அவர்கள் அருளுரை ஆற்றினார். அதன்பின்பு யாழ் பிராந்திய திருச்சபைகள் இணைந்து பவனியாக யாழ் மத்திய கல்லூரியை சென்றடைந்தன.




அங்கு வேதாகமப் புதிர் போட்டிகள், தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடல்கள் போட்டிகள் போன்றவை நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கத்தோலிக்க திருச்சபையின் அருட்தந்தை. வில்சன் பற்றிரிக் மற்றும் பிரித்தானிய ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சி அமைப்பாளர் சிவகலா சிறிதர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது இறுதிப் போட்டிகளில்



வெற்றி பெற்ற பிள்ளைகளுக்கு கேடயங்கள், வெற்றிக்கிண்ணங்கள், மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இதன்போது 29.07.2023 அன்று கிறிஸ்தவ



இறையியல் கல்லூரியில் நடந்து முடிந்த அரைஇறுதிச் சுற்றுப்போட்டிகள், மற்றும் 28.05.2023 திருச்சபைகளில் நடைபெற்ற மனனவசனம் ஒப்புவித்தல், கட்டுரை எழுதுதல், கவிதை எழுதுதல், சித்திரம் வரைதல் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற பிள்ளைகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள், சான்றுதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

விசேடமாக, இந்நிகழ்வில் நடைபெற்ற குழுப்பாடல் போட்டிகளில்,

**கீர்த்தனைப்பாடல் குழு A**

- 1ம் இடம் - நவாலி திருச்சபை
- 2ம் இடம் - மானிப்பாய் திருச்சபை
- 3ம் இடம் - உடுவில் திருச்சபை

**கீர்த்தனைப்பாடல் குழு B**

- 1ம் இடம் - அளவெட்டி திருச்சபை
- 2ம் இடம் - அராலி திருச்சபை
- 3ம் இடம் - நகர்பணி திருச்சபை

**ஞானப்பாடல் குழு A**

- 1ம் இடம் - நவாலி திருச்சபை
- 2ம் இடம் - மானிப்பாய் திருச்சபை
- 3ம் இடம் - உடுவில் திருச்சபை

**ஞானப்பாடல் குழு B**

- 1ம் இடம் - அளவெட்டி திருச்சபை
- 2ம் இடம் - ஏழாலை தெற்கு திருச்சபை
- 3ம் இடம் - நகர்பணி திருச்சபை மற்றும் சத்தியபுரம் திருச்சபை

**ஆங்கிலப்பாடல்**

- 1ம் இடம் - நவாலி திருச்சபை
- 2ம் இடம் - அளவெட்டி திருச்சபை
- 3ம் இடம் - ஏழாலை தெற்கு திருச்சபை

போன்ற திருச்சபைகள் பெற்று, தங்களுக்கான கேடயங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேலும், வேதாக புதிர்ப்போட்டி நடைபெற்றது, அப்போட்டிகளில்,

**ஆரம்பப் பிரிவில்,**

- 1ம் இடம் - மானிப்பாய் திருச்சபை
- 2ம் இடம் - மானிப்பாய் திருச்சபை

**இடைநிலை கனிஷ்ட பிரிவில்,**

- 1ம் இடம் - மானிப்பாய் திருச்சபை
- 2ம் இடம் - மானிப்பாய் திருச்சபை

**இடைநிலை சிரேஷ்ட பிரிவில்,**

- 1ம் இடம் - ஏழாலை தெற்கு திருச்சபை
- 2ம் இடம் - நகர்பணி திருச்சபை

**மேல் பிரிவில்,**

- 1ம் இடம் - நவாலி திருச்சபை
- 2ம் இடம் - அளவெட்டி திருச்சபை


பெற்றுக்கொண்டனர்.



இப்பிள்ளைகள் விழாவில் யாழ் பிராந்தியத்தின் அருட்பணியாளர்கள், ஞாயிறு பாடசாலை ஆசிரியர்கள், பிள்ளைகள்,பெற்றோர், நலன் விரும்பிகள் மற்றும் சமூக மேம்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டமை சிறப்புக்குரிய விடயமாகும். இப் பிள்ளைகள் விழா உற்சாகத்தை யும் மகிழ்வையும் தந்தது மட்டுமின்றி ஞாயிறு பாடசாலை பிள்ளைகளிள் ஆன்மீக வாழ்வுக்கு துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

## கிழக்கிலுள்ள சிறிய திருச்சபைகளுக்கான உதவிகள்

யூன் மாதம் கிழக்குப்பிராந்திய திருச்சபைகளை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் புதிய தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் பார்வையிட்டதன் பின்னர் தலைவர் மற்றும்



அலுவலர்களின் முயற்சியினால் ஒரு சில பணிகள் தற்போது வரை முன்னெடுக்கப் பட்டுள்ளன. மானிப்பாய் திருச்சபை தாம் பாவித்த பலிபீடத்திற்கான ஒரு சில பொருட்களை மொறக்கொட்டான்சேனை திருச்சபைக்கென்று அனுப்பி வைத்துள்ளனர்.



கொழும்பு திருச்சபை வாலிபர்கள் தும்பளாஞ்சோலை திருச்சபையின் வேலியை அடைத்துக்கொடுப்பதற்கு முன் வந்துள்ளனர். அதன்படி தற்போது ஆலயம் வர்ணம் பூசப்பட்டு வேலி அடைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

## திருமுழுக்கு

01.10.2023 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு உடப்புசல்லாவ திருச்சபையில் திருவிருந்து வழிபாட்டுடன் திருமுழுக்கு வழிபாடும் நடைபெற்றது. வழிபாட்டை திருச்சபை அருட்பணியாளர் அருட்பணி. என். கங்கா பிரசாத் அவர்களுடன் இணைந்து அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்களும், கொழும்பு மற்றும் மலையக பிராந்திய தலைவர்



அருட்பணி. ராஜன் றொகான் அவர்களும் ஏறெடுத்தனர். இவ் வழிபாட்டில் 04 பிள்ளைகள் திருமுழுக்கு பெற்றனர். இதில் 02 பிள்ளைகள் அருட்பணி. என். கங்கா பிரசாத் அவர்களின் பிள்ளைகள் என்பது குறிப்பிடதக்கது. வழிபாட்டின் பின்னர் புதிய உத்தியோருக்கான வரவேற்பு நிகழ்வு திருச்சபை அருட்பணியாளர் தலைமையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஐக்கியம் மதியபோஜனத்துடன் நிகழ்வுகள் நிறைவேறின.

# FROM DARKNESS TO LIGHT

Have you ever felt like your life is surrounded by darkness, longing for a tiny spark of light to lead the way? It's a common sentiment many of us can relate to.

In the face of adversity Harmony courageously shared, *"But I think we have to come back and understand that it is God who's going to help us to get through, it's God who loves us and it's God who we are going to see one day"*

Harmony began to recount her life story which took an unexpected turn..."Our second son 'Gus' was born in October 2017. Then the contractions started and everything was perfect. We went to the hospital and the nurse said she couldn't find his heartbeat. So everything after that was a blur. I realized he was no longer alive. He was born and I was able to hold him but he was not alive. It's not easy to explain what it's like to lose a child. I realized that I had to live with open arms. I realized everything belongs to God. Nothing is mine. All I have is God's blessings. Then something popped up in my news feed. It was a channel I follow on Face book. And the preacher said just clicked me that I didn't lose Gus, I gained Gus. My life on earth will be very short and my time in heaven will be eternal. I journaled the pictures and videos of Gus in the hospital but I think the most important thing have been prayer it has been going back to the bible. And under -standing that there is a God who loved me and he loves Gus that I possibly could. When we go through sufferings the important part we can do is turn to God." she said. This story serves as an inspiration for all, reminding us that even in the most challenging moments, God's unwavering presence can lead us towards a brighter path.



Imagine a closed tap - no water can flow until we turn it on. Similarly, when we keep our Bibles closed, we miss out on the divine wisdom and guidance it holds. It's important to remember that when we seek God's light, we need to open up our hearts and minds to His teachings, just like we turn on the tap to experience the flow of water. Imagine you walk into a dark room. The first thing we would try to find is light. We will try reaching for a flashlight or the switch to brighten the dark room. But, when our life is dark, why do we run to people for temporary solutions and don't turn to God, who is the ultimate source of light, love, and comfort?

Let's have a look at, Psalm 119:105.
It says, **"Your word is a lamp to my feet and a light to my path."**

When our hearts feel heavy and the world seems dim, it can be easy to forget that God's light is always there, ready to guide us and fill us with the warmth of His presence.
Sometimes in life, we may feel like our path is filled with darkness and uncertainty. But it's during these challenging times that we should lean on our faith and trust in God's timing.
Proverbs 3:5-6 says, **"Trust in the Lord with all your heart and lean not on your own understanding; in all your ways submit to him, and he will make your paths straight."**
Just as a seed needs time to grow into a beautiful flower, our lives also go through seasons of growth. We may not always understand why things happen the way they do, but God has a plan for each of us. When we complain to God about the darkness in our lives, it's an opportunity to surrender our worries, fears, and doubts to Him and trust that He will guide us towards the light. When we trust God's timing, He can work in our lives and bring blessings and opportunities. Instead of complaining, let's have faith in God's plan.

When God is always there, listening to us 24/7, why do we claim to be too caught up in busyness, unable to spare even a moment to have a conversation with Him who gave us life?
Just like we make time for loved ones, let's prioritize our connection with God. A simple conversation can make a big impact on our spiritual well-being. So, amidst our busy lives, let's find a moment to talk to God and nurture our relationship with Him.
Can the guests come in when the door is closed?
Similarly, will God come in when our hearts are closed?
Let's give it a little thought, shall we?

**"You will seek me and find me when you seek me with all your heart.**"
- Jeremiah 29:13

**Miss. ATHEENA THEVATHAS**

# கவிக்களம்



## போட்டி இல. 01

இப் புகைப்படத்தை கருவாய்க்கொண்டு எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை எழுதி அனுப்புங்கள். தரமான கவிதைகள் பிரசுரிக்கப்படும். சிறந்த ஓர் கவிதைக்கு பரிசில் வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி
கவிக்களம்
உதயதாரகை
ஆசியா இல்லம்,
மருதனார்மடம், சுன்னாகம்

மின்னஞ்சல் முகவரி
*themorningstar1841@gmail.com*

**Whatsapp**
0773 627 537

இறுதி திகதி 31-12-2023

## பற்றிக்கோட்டா செமினரியின்
# 200வது ஆண்டு நிறைவு

15.07.2023 சனிக்கிழமை காலை 07.00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய




மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட நீண்ட வாகனப் பேரணியுடன் பற்றிக்கோட்டா செமினரியின் 200வது ஆண்டு நிறைவு விழா மிகவும் கோலாகலமாக ஆரம்பமானது.

இப்பேரணி கல்லூரியின் முன்றலில் இருந்து பேராயர் பேரருட்கலாநிதி. வி. எஸ். பத்மதயாளனின் ஜெபத்துடன் ஆரம்பமாகி நவாலி ஆனைக்கோட்டை, மானிப்பாய், சீரணிச்சந்தி, தொட்டிலடிச்சந்தி, இளவாலை, பண்டத்தரிப்பு, சித்தங்கேணி ஊடாக மதியம் 12 மணியளவில் கல்லூரியினைச் சென்ற டைந்தது. இப்பேரணியில் பிறநாடுகளில் வாழும் ஏராளமான பழைய மாணவ மாணவிகள் கலந்து கொண்டமை சிறப்பு அம்சமாகும்.




200 ஆண்டுகளை நிறைவு செய்யும் இக்கல்லூரி மற்றும் பிக்னல் மைதானம் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்ந்தன. இவ்விழாவையொட்டி பல்வேறு




விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள், கருத்தரங்குகள், மரம் நாட்டும் வைபவங்கள், போன்றன 2023 ஆம் ஆண்டின் ஒவ்வொரு மாதங்களிலும் கல்லூரியின் முதல்வர் திருமதி. றுசிரா குலசிங்கம் அவர்களுடைய தலைமையில் நடைபெற்று வருகிறது.

இத்தொடர் நிகழ்வுகளின் முதல் நிகழ்வான 15.07.2023 அன்று தென்னிந்திய திருச்சபை பேராயர். வி. எஸ். பத்மதயாளன் அவர்களும் வெளிநாடுகளில் இருந்து வந்த பிரமுகர்களும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும் கலந்து கொண்டனர்.

# வடலி
# சிறுவர் அருட்பணி நிலையம்

2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கீரிமலைக்கும் மாவிட்டபுரத்திற்கும் இடையில் அமைந்துள்ள கொல்லன்கலட்டி, மாவைகலட்டி, கிளானை, நல்லிணக்கபுரம் ஆகிய கிராமங்களை மையமான மாவைகலட்டியில் அருட்பணி. ஏ.



எஸ். தேவகுணானந்தன் போதகர் அவர்களால் சிறுவர் மத்தியில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வேளையில் தெல்லிப்பளைத் திருச்சபையில் அருட்பணியாளராக கடமையாற்றிய அருட்பணி. ஏ. கே. சுரேந்திரன் அவர்களுடைய தலைமையில் திரு. அன்ரு தேவதாசன் அவர்களின் சிறுகுடிசையில் வழிபாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் வழிபாட்டிற்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது இவ்வழிபாட்டுக்கள் திரு. சிங்கராஜா அவர்களின் இல்லத்தில் நடைபெற்றன. 50 பேரளவில் வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.



g 1/4 ஏக்கர் காணி நன்கொடையாக வழங்கப்பட்டது. ஆரம்பம் முதல் இப்பணிகளுக்கு உதவி வந்த திரு. திருமதி. ஜி. இராஜநாயகம் மற்றும் பொறியியலாளர் இராஜநாயகம் ராஜ்மோகன் ஆகியோருடைய அனுசரணை யுடனும், சிபாரிசுடனும் அமெரிக்காவின் வட கரோலினா பகுதியில் இயங்கும் அமைதிக்கான வடகரோலினா ( North Carolina for Peace) என்ற நிறுவனம் முழுமையான நிதி உதவியினை செய்ய முன் வந்தது. அவர்களுடைய உதவியுடன் சுற்றிலும் வேலி அடைக்கப்பட்டு, வாயில் கதவும் (Gate) போடப்பட்டு ஒரு பெரிய மண்டபமும் அமைக்கப்பட்டது.

19.07.2023 புதன்கிழமை அமெரிக்காவின் இந்த நிறுவனத்திலிருந்து வந்த பொறியிலாளர்



இ. இராஜ்மோகன் அவர்களும், அவரது பாரியார் மருத்துவ கலாநிதி. றொஸினி இராஜ்மோகனும், அவர்களது பிள்ளைகளும் இந்நிலையத்தை பார்வையிட்டு, அங்கு கற்றல், கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 65 பிள்ளைகளுடனும் 05 ஆசிரியர்களுடனும் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களும் யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி எம். டி. போல் சுரேஷ் அவர்களும் திட்ட மேற்பார்வையாளர் திருமதி. ஞானதீபம் இராசகாந்தன் அவர்களும் கலந்து கொண்டனர். இச்சந்திப்பில் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பணிகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இந்நிறுவனத்தினர் தொடர்ந்தும் இப்பணிகளுக்கு உதவி செய்வதாக வாக்களித்துள்ளனர்

# கிழக்குப் பிராந்திய முன்பள்ளி ஆசிரியர் செயலமர்வு

கிழக்குப் பிராந்திய முன்பள்ளி ஆசிரியர்களின் செயலமர்வு ஆகஸ்ட் 18, 19 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றன. இச்செயலமர்வில் 23 ஆசிரியர்கள் பங்கு



பற்றினார்கள். இச்செயலமர்விற்கு கிழக்கு பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எம். லூக் ஜோன் அவர்களும், சேவை திருப்பணிமன்ற உதவி இயக்குனர் அருட்சகோதரன். எஸ். டானியல் செல்வகுமார் அவர்களும் கலந்து கொண்டனர். திருமதி இயேசு ரத்னா கேமாலதா அவர்கள் வளவளராக வருகை தந்து முன்பள்ளி ஆசிரியரின் கடமைகளும் பொறுப்புகளும் என்ற தலைப்பில் முன்பள்ளிகளில் பேணப்பட வேண்டிய



ஆவணங்கள் மற்றும் வருடாந்த, வாராந்த, நாளாந்த செயற்பாட்டு நடைமுறைகள் அறிக்கைகள் மற்றும் பிள்ளைகளின் முழுமையான விருத்தி பற்றிய விடயங்கள் குறித்துப் பேசினார். இச்செயலமர்வு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மறுமைக்குள் பிரவேசம்



### திருமதி. விஜயலட்சுமி தேவராஜா
(போதகர் அம்மா)

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அருட்பணியாளரான பசுபதி தேவராஜா அவர்களின் அன்பு மனைவி திருமதி. விஜயலட்சுமி தேவராஜா அவர்கள் சிறிது கால சுகவீனத்தின் பின்னர் 27.05.2023 சனிக்கிழமையன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அவருடைய நல்லடக்க வழிபாடு தேவராஜா போதகருடைய சகோதரர் அருட்பணி. பி. தேவமித்திரன் அவர்களுடைய அரியாலை இல்லத்திலே 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 02.00 மணிக்கு நடைபெற்றது. வழிபாட்டினை நகர்பணி திருச்சபையின் குருவானவர் அருட்பணி. எம். ஜெயானந்தராஜா அவர்கள் நடாத்த இறைசெய்தியினை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் பகிர்ந்து கொண்டார். சி.ஏ.சி.எம் திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, இலங்கை திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை அருட்பணியாளார்கள் கலந்து கொண்ட இவ்வழிபாட்டில் இறையாசியினை தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் பேராயர் வி. எஸ். பத்மநாதன் அவர்கள் அறிவித்தார். இறுதியில் அவருடைய பூதவுடல் அவருடைய சொந்த இடமான காரைநகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு காரைநகர் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.


## மறுமைக்குள் பிரவேசம்



### திரு. என். டி. செல்வராஜா

மறுமைக்குள் பிரவேசித்த அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் முன்னாள் உபதலைவர் திரு. என். டி. செல்வராஜா அவர்களின் நல்லடக்க ஆராதனை 29.09.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இறுதிவழிபாட்டு நிகழ்வுகளில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள், பொருளாளர் திரு. என். கே. ரமேஸ்குமார் அவர்கள், திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. ராஜன் றோகான் அவர்கள், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் முன்னாள் அருட்கலாநிதி. எஸ். ஜெயநேசன் அவர்கள், ஓய்வு பெற்ற அருட்பணி. இயேசுதேவன் அவர்கள் சேவை திருப்பணி மன்றத்தின் இயக்குனர் திரு. பிரவீன் ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மறுமைக்குள் பிரவேசம்




### அருட்பணி. ஏ. வி. ஜேசுதாசன்

நீண்ட காலமாக எமது மண்ணில் இறைபணியாற்றிய இறைபணியாளனும் மூத்த அருட்பணியாளருமாகிய அருட்பணி. ஏ. வி. ஜேசுதாசன் அவர்கள் 03.08.2023 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அன்னாருடைய நல்லடக்க ஆராதனை 04.08.2023 அன்று மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையில் உறவினர்கள், சபைமக்கள், நண்பர்கள் சூழ்ந்திருக்க திருச்சபைத் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்வழிபாட்டில் மானிப்பாய் திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. டி. எஸ். மதியாபரணம், நவாலி திருச்சபை அருட்பணியாளர் அருட்பணி. ஜே. அன்ரனி சுதாகர் உதவியாகச் செயற்பட்டனர். நவாலியைச் சேர்ந்த திரு. ப. பாலநாதன் அவர்கள் ஊர்மக்கள், நண்பர்கள் சார்பிலும், முன்னாள் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன் அவர்கள் அருட்பணியாளர் சார்பிலும், மகள் திருமதி. ஜீவநந்தினி அமலதாஸ் அவர்கள் குடும்பத்தின் சார்பிலும் இரங்கல் உரையாற்றினார்கள். திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் 128 ஆம் சங்கீதத்திலிருந்து இறைசெய்தியினைப் பகிர்ந்து கொண்டார். அதில் அவர் இந்த சங்கீதம் இயேசுதாசன் போதகருடைய வாழ்வின் ஆசீர்வாதங்களை உறுதிப்படுத்துகிறதென்றும், சுயமுயற்சி (தொழில்) திருமணம், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் போன்ற நான்கு ஆசீர்வாதங்களையும் கடவுள் இவருக்கு அருளிச் செய்தார் என்றும் கூறினார். **“கடவுளுக்கு பயந்திருக்கிற மனுசன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்”**

இறுதியில் அவருடைய உடலை தாங்கிய பேழை மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை கல்லறைத் தோட்டத்தில் சபைகுருவின் தலைமையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## தொழிநுட்பக் கல்லூரிக்கு அலுவலர்கள் விஜயம்



மட்டகளப்பு தூய பரியோவான் தொழிநுட்பக் கல்லூரிக்கு அலுவலர்கள் விஜயம் செய்து ஆளுனர் சபையினரை சந்தித்தனர். ஆளுனர் சபையினரால் புதிய அலுவலர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.


## மறுமைக்குள் பிரவேசம்



### அருட்கலாநிதி
### டேவிட் சதானந்தன் சொலமன்

தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயத்தின் குருவானவரும், யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான அருட்கலாநிதி. டேவிட் சதானந்தன் சொலமன் அவர்களின் நல்லடக்க வழிபாடு 09.08.2023 புதன்கிழமை, மாலை 02.00 மணிக்கு வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபை பேராலயத்தில் பேராயர் பேரருட்கலாநிதி. வி. எஸ். பத்மதயாளன் தலைமையில் நடைபெற்றது. இதில் பலர் இரங்கல் உரையாற்றினார்கள். பேராயர் இறைசெய்தியை பகிர்ந்து கொண்டார்.

## நன்றி செலுத்தும் வழிபாடு





மறுமைக்குள் பிரவேசித்தவர்களான திரு. எஸ். இரத்தினவேல் மற்றும் அவரது மகன் திரு. மகிபன் இரத்தினவேல் அவருடைய வாழ்வுக்கும், பணிக்கும் நன்றி செலுத்தும் வழிபாடு 01.07.2023 அன்று பண்டத்தரிப்பு சி.ஏ.சி.எம் திருச்சபை தேவாலயத்தில் சபைக்குரு அருட்பணி. ஜே. பி. தேவருட்செல்வம் தலைமையில் நடைபெற்றது. யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல்சுரேஸ் அவர்கள் இறைசெய்தியினைப் பகிர்ந்து கொண்டார். இதனை தொடர்ந்து வை.எம்.சி.ஏ யில் மதிய ஐக்கிய போசனத்தினை குடும்பதினர் ஆயத்தம் செய்தனர். அனைவரும் அதில் கலந்து கொண்டனர்.

## இலங்கைத் திருச்சபையின் வருடாந்த அமர்வு

இலங்கைத் திருச்சபையின் வருடாந்த அமர்வானது. 26.10.2023 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை திருச்சபையின் பேராலயத்தில் வழிபாட்டுடன் ஆரம்பமானது. இவ் வழிபாடு இலங்கை திருச்சபையின் கொழும்பு பேராயர் துசாந்த றொட்றிக்கோ தலைமையில் நடைபெற்றது. இவ் வழிபாட்டில் பல்வேறு திருச்சபைகளின் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். இவ் ஆரம்ப வழிபாடானது தற்போதைய இலங்கையின் சூழலை வெளிப்படுத்தும் வண்ணம் பல செயற்பாடுகளுடன் சிறப்பாக அடையாளப்படுத்தப்பட்டன.

# தலைமைத்துவப் பயிற்சி பட்டறை - நுவரெலியா

தலைமைத்துவப் பண்பு என்பது இலகுவான ஒன்று அல்ல. ஒரு சிறந்த தலைவன் குடும்பத்திலிருந்து உருவாகிறான். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று சொல்வார்கள். அந்தக் கண்ணோட்டத்தோடு அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் வாலிபர் பணியின் இயக்குனர் அருட்பணி. எம். ஜெயானந்த ராசா அவர்களின் வழிகாட்டலில் தலைமைத்துவ பண்புடைய தலைவர்களை உருவாக்கவும் அவர்களைத் திருச்சபைக்குள் மட்டும் முடங்கிப் போகாதவாறு ஒவ்வொரு சமூகத்திலும் சிறந்து விளங்க செய்யவும் செப்டம்பர் மாதம் 15ம், 16ம் திகதிகளில் தலைமைத்துவப் பயிற்சி பட்டறை ஒன்றினை நான்கு பிராந்தியங்களிலும் இருந்து சுமார் 30 வாலிபர்களை உள்ளாடக்கி நுவரெலியாவில் உள்ள Smyrna Fellowship என்ற இடத்தில் சிறப்பாக நடத்தினார்கள்.



பிராந்திய இணைப்பாளர்களுடைய ஊக்குவிப்பும், அருட்பணியாளர்களின் நெறிப்படுத்தலும் அன்றைய நாட்களில் வாலிபர்களின் பண்புகளை வெளிக்கொண்டுவர உதவியது. குறிப்பாக இப்பட்டறையின் வளவாளராக கலந்துகொண்ட அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் கொழும்பு மற்றும் மலையக பிராந்தியத்தின் குரு முதல்வர் அருட்பணி. ராஜன் றோகான் அவர்களும், யாழ் பிராந்தியத்தின் குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல்சுரேஸ் அவர்களும், நவாலி திருச்சபையின் ஊழியன் அருட்பணி. ஜெ. அன்ரனி சுதாகர் அவர்களும் கிறிஸ்துக்காக இளைஞர் அமைப்பின் யாழ் பிராந்திய இணைப்பாளர் திரு. ஏ. தேவானந் அவர்களும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் வாலிபர்பணி இணைப்பாளர் அருட்பணி. எம். ஜெயானந்தராசா அவர்களுடன் இணைந்து செயற்பட்டனர்.

மேலும் அன்றைய நாள், பட்டறையோடு நின்று விடாமல், Whatsapp குழுவில் கர்த்தருடைய வார்த்தைகளை பரிமாறுவதும், Zoom செயலி ஊடாகத் திருமறைப் படிப்பை நடத்தி தலைவர்களை வாலிபர் மத்தியிலிருந்து தலைமைத்துவ பண்புடையவர்களாக உருவாக்குவதற்குத் தொடர்ந்து முயற்சித்து வரும் அமெரிக்கன் சிலோன் மிசன் வாலிபப் பணி இணைப்பாளருக்கு உதயதாரகையின் வாழ்த்துக்கள்

## அருட்கலாநிதி எஸ். ஜெயநேசன் அவர்களுடன் அருட்பணியாளர்கள்

கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அருட்பணியாளருக்கான ஓர் சிறப்பு ஒன்றுகூடல் 06.10.2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 08.30 மணிக்கு அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ் ஒன்றுகூடலில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் முன்னாள் தலைவர் அருட்கலாநிதி. எஸ். ஜெயநேசன் அவர்களும் அருட்பணி. இயேசுதேவன் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்கள். ஒன்றுகூடலில் கலந்துகொண்ட முன்னாள் தலைவர் அருட்பணியாளர்களால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். மதியம் 01.00 மணியளவில் ஐக்கிய மதியபோசனம் வழங்கப்பட்டது. அருட்கலாநிதி. எஸ். ஜெயநேசன் அவர்கள் கனடா தேசத்தில் வசித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



## அருட்பணி பொப்சி அருளம்பலம்
### யாழ் பிராந்திய அருட்பணியாளர்கள் சந்திப்பு

அவுஸ்திரெலியாவில் இருந்து வருகை தந்தவரும் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஊழியருமான அருட்பணி. பொப்சி அருளம்பலம் அவர்களுடன் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை யாழ் பிராந்திய அருட்பணி யாளர்களின் கூட்டம் ஆசிய இல்லத்தில் நடைபெற்றது. 25.08.2023ம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெற்ற மேற்படி கூட்டத்தை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் தலைமை தாங்கி நடாத்தினார். அருட்பணி. பொப்சி அருளம்பலம் அவர்களுக்கும், அவரது பாரியாருக்கும் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.




**அருட்பணி. ஏ. வி. இயேசுதாசன்.....** (04ஆம் பக்க தொடர்ச்சி)

பெற்றுக்கொண்டார். தன்னுடைய 25 ஆம் வயதில் இறைபணிக்கான அழைப்பைப் பெற்றுக்கொண்ட இவர். இறையியல் பயிற்சிக்காக 1964ஆம் ஆண்டு இந்தியாவின் வேலூரில் உள்ள "ஆற்காடு இறையியல் கல்லூரியில்" இணைந்து கொண்டார். 1964 - 1966 காலப்பகுதியில் ஆற்காடு இறையியல் கல்லூரியிலும் 1971 - 1973 காலப்பகுதியில் இலங்கையின் பிலிமத்தலாவையில் உள்ள "லங்கா இறையியல் கல்லூரியிலும்", 1975 - 1977 காலப்பகுதியில் அரசடியில் உள்ள "தமிழ்நாட்டு இறையியல் கல்லூரியிலும்" இறையியல் பயின்றார்.



1968 ஆம் ஆண்டு தன்னுடைய வாழ்க்கைக்கும் இறைபணிக்கும் துணையாக செல்வி. பாக்கியவதி சிவசம்பு என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு தேவானந், ஜீவநந்தினி, பவாநந்தினி, தயானந் எனும் நான்கு பிள்ளைச் செல்வங்களைக் கொடுத்த கடவுள் இவருடைய இல்லற வாழ்வை நிறைவாக ஆசீர்வதித்தார்.

இவர் தன்னுடைய இறைப்பணியினை 1973 ஆம் ஆண்டில் இலங்கை திருச்சபையில் (அங்கிலிகன் திருச்சபை) ஆரம்பித்தார். வன்னிப் பெறிலப்பரப்பில், தருமபுரம் எனும் கிராமத்தில் உள்ள பரி. லூக்கா ஆலயமே இவரது முதலாவது பணிக்களமாகும். (1973 -1974). அதன் பின்னர் தருமபுரத்தில் உள்ள கானான் எனும் நிலையத்தில் ஒரு வருடம் (1974) இறைபணியாற்றினார்.

இதன் பின்னர் இவர் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாணப் பேராயத்துடன் இணைந்தபோது, யாழ்ப்பாண பேராயர் இவரை 1974 ஆம் ஆண்டில் அளவெட்டித் திருச்சபைக்கு ஊழியக்காரனாக நியமித்தார். 1974 - 1975 வரை அளவெட்டியில் பணியாற்றிய இவர், அதன் பின்னர் தமிழ்நாட்டு இறையியல் கல்லூரி (1975 - 1977), ஏழாலை தெற்கு (1977 - 1978), அச்சுவேலி (1979 - 1983), சங்கானை (1983 - 1985) ஏழாலை வடக்கு + தெற்கு (1985 - 1987), காரைநகர் (1987 - 1990), வரணி (1990 - 1997) மானிப்பாய் (1997 - 1999), ஆனைக்கோட்டை (1999 - 2004) ஆகிய திருச்சபைகளிலே இறைபணியை செய்து 2004 இல் இளைப்பாறினார்.

இளைப்பாறிய இவர், எங்கெங்கு தேவை ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் இறைபணியினைத் தொடர்ந்து செய்து வந்தார். 2011 ஆம் ஆண்டு அருட்பணி. ரி. ஈ. அசோக்குமார் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல சகோ. கெனடி அவர்கள் அராலித் திருச்சபையினை 10.04.2011 அன்று பொறுப்பேற்றுக்கொண்டார். அவ்வேளையில் அருட்பணி. ஏ. வி. இயேசுதாசன் அவர்கள் அராலித் திருச்சபைக்கு சேகர குருவாராக நியமிக்கப்பட்டார்.

இவர் அராலியில் கெனடி போதகருக்கு 06.07.2012 வரை சேகரக் குருவாகப் பணியாற்றியதுடன் தன்னுடைய அதிகமான நேரங்களை அராலித் திருச்சபையிலேயே கழித்தார். 2007 ஆம் ஆண்டு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை உருவாகிய பின்பு காலத்திற்கு காலம் நெருக்கீடுகள் நிலவிவந்தன. அதன் காரணமாக ஏ. வி. ஐயாவும் கெனடிப் போதகருடனேயே குருமனையில் தங்கியிருந்து இறைபணியினை ஆற்றி வந்தார். பின்னர் தன்னுடைய ஓய்வு நாட்களை இவர் உடுவினிலும் மானிப்பாயிலும் வாழ்ந்த இரு பெண்பிள்ளைகளுடன் கழித்து பயனுள்ள பல காரியங்களைச் செய்து வந்தார். திருச்சபையின் பிரசங்க வழிகாட்டி நூலை உருவாக்குவதிலே நீண்டகாலம் அயராது உழைத்தார். இறுதி வருடங்கள் அமைதியாகவும், சுறுசுறுப்பாகவும் இருந்த இவர் வேலை செய்து கொண்டிருக்கும்போதே கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவர் விட்டுச் சென்ற பிள்ளைகளின் குடும்பங்களுக்கு உதயதாரகை தன் ஆறுதலைக் கூறிக் கொள்கிறது.

# கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் 40வது ஆண்டு நிறைவு விழா

கிறிஸ்தவ இறையியற் கல்லூரியின் 40 வது ஆண்டு விழா 28.10.2023 ஆம் திகதி அன்று நடைபெற்றது. காலை 09:30 மணியளவில் கேட்போர் கூடத்தில் நன்றிசெலுத்தும் வழிபாட்டினை மிகச் சிறப்பான முறையில் கல்லூரியின் முதல்வர் அருட்பணி. ஏ. கமலகுமாரன் அவர்களின் தலைமையில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி ஏ. எஸ். தேவ குணானந்தன் அவர்களும் இணைந்து முன்னெடுத்தனர். இவ்வழிபாட்டில் இறையியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களால் ஜெபங்கள், விசேட பாடல்கள், திருமறை வாசகங்கள் என்பன முன்னெடுக்கப்பட்டன. கத்தோலிக்க திருச்சபையின் யாழ் மறை மாவட்டத்தின் அருள்தந்தை பி. ஜே. ஜெபரட்ணம் அவர்கள் இறைசெய்தியை பகிர்ந்து கொண்டார்.





வழிபாட்டினை தொடர்ந்து கல்லூரிக்கீதம் கல்லூரி மாணவர்களால் இசைக்கப்பட்டு பின்னர் வாழ்த்துரைகள் நேரடியாகவும், காணொளி வழியாகவும், கடிதங்கள் ஊடாகவும் பகிரப்பட்டன. சுமார் 01.30 மணியளவில் மதிய ஐக்கியவிருந்து வழங்கப்பட்டது. மாலை 03.00 மணியளவில் கிறிஸ்தவ இறையியற் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கும், கல்லூரியின் மாணவர்களுக்கும் இடையிலான நட்பு ரீதியான கரப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.



கிறிஸ்தவ இறையியற் கல்லூரியின் 40 வது ஆண்டு விழாவையொட்டி 27 ஆம் தேதி நடைபெற்ற நிகழ்வில் இறை சிந்தனைகள் ஆய்வுகள் என பலரால் நிகழ்த்தப்பட்டன. இதில் **கிறிஸ்தவ இறையியற் கல்லூரி யின் வரலாற்றையும், அதன் பின்னணி தேவைகள்** என்ற தலைப்பில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் பகிர்ந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து பேராசிரியர் நியேந்தினி கதிர்காமர் அவர்கள் **பெண்ணிய பார்வையிலே இறையியற் பணி** என்ற பொருளிலும், திரு. நிலாந்தன் அவர்கள் **அரசியல் பார்வையில் இறைபணி** குறித்தும் உரையாற்றினார்கள். இறுதியில் அருட்தந்தை கலாநிதி. ரவிராஜ் அவர்கள் இவைகளை இறையிலாக்கம் செய்தும் சிறப்பாக உரையாற்றினார். பின்னர் நிகழ்வில் கலந்துகொண்ட சிலரலும் கருத்துக்கள் பகிரப்பட்டன.

# பிராந்தியங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள்

பிராந்தியங்களுக்கு இடையில் வாலிபர்களின் ஐக்கியத்தை பலப்படுத்தும் வகையில் 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் வாலிபர்ப்பணியானது, அதன் வாலிபர் இணைப்பாளர் அருட்பணி. எம். ஜெயானந்தராசா அவர்களின் தலைமையில்



துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், ஆகிய போட்டிகளை பிராந்திய வாலிபருக்கு இடையில் நடத்தியது.

இதன் போது துடுப்பாட்ட போட்டியில் வன்னி பிராந்தியம் முதலாவது இடத்தையும், யாழ் பிராந்தியம் இரண்டாவது இடத்தையும், மலையகம் மற்றும் கொழும்பு மூன்றாவது இடத்தையும் பெற்றதோடு கரப்பந்தாட்ட



போட்டியில் வன்னி பிராந்தியம் முதலாவது இடத்தையும், மலையகம் மற்றும் கொழும்பு இரண்டாவது இடத்தையும், யாழ் பிராந்தியம் மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டது. மேலும் வலைப்பந்தாட்ட போட்டியில் யாழ் பிராந்தியம் முதலாவது இடத்தையும், வன்னி பிராந்தியம் இரண்டாவது இடத்தையும், மலையகம் மற்றும் கொழும்பு பிராந்தியம் மூன்றாவது இடத்தையும் தட்டிச் சென்றது.

மேலும் இப் போட்டிகளில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. அந்த வகையில் சிறந்த துடுப்பாட வீரனாக வன்னி பிராந்தியத்தைச் சேர்ந்த திரு. எஸ் மேஷாக் அவர்களும், சிறந்த



பந்து வீச்சாளனாக யாழ் பிராந்தியத்தை சேர்ந்த திரு. எஸ். தனுஜன் அவர்களும், கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வன்னிப் பிராந்தியத்தைச் சேர்ந்த திரு. வே. வேந்தன் அவர் களும், வலைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் யாழ் பிராந்தியத்தைச் சேர்ந்த செல்வி. ரி. கஜிலா அவர்களும் சிறந்த வீரருக்கான விருதுகளை பெற்றுக் கொண்டனர்.

அத்தோடு போட்டியில் பங்குபற்றிய அனைத்து வீரர்களுக்கும் சான்றிதழ்களையும், வெற்றி பெற்ற வீரர்களுக்கு கேடயங்களையும், பதக்கங்களையும் யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல்சுரேஸ் அவர்களும், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பொருளாளர் திரு. என். கே. ரமேஷ்குமார் அவர்களும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் உபதலைவர் திரு. ஐ. அருள்றொகான் அவர்களும் வழங்கி வீரர்களைக் கௌரவித்தனர். அத்துடன் வாலிபர் இணைப்பாளர் கேடயங்களையும், பதக்கங்களையும் வழங்க உதவி செய்தவர்களுக்கும், வழங்கியவகளுக்கும், போட்டியினை நடாத்த துணை



நின்றவர்களுக்கும் குறிப்பாக அருட்பணியாளர்கள், யாழ் பிராந்திய உத்தியோத்தர்கள் மற்றும் அனைத்துப் பிராந்திய இணைப்பாளர்களுக்கும் போட்டியில் கலந்து கொண்ட வாலிபர்கள் அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்தார்.

இப்பத்திரிகையானது ஆனைகோட்டையில் அமைந்துள்ள றூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு,
அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினாரால் வெளியிடப்பட்டது.